ஓம் விஸ்வப் பிரமனே நம
பாரிஸ் லா சப்பலில்
ESANE JEWELLRY
தங்க நகை சேமிப்புத் திட்டத்தில் இணைபவர்களுக்கு முதல் மாதம் இலவசம்!
8, Rue Cail,75010 Paris Tel: 01 42 81 18 03
email: esanejewellery@gmail.com Port: 06 66 09 55 11

OM MURUGA DESIGN & PRINT
+33 1 71 93 34 32
Info@omprint.fr
71 Rue Louis Blanc 75010 Paris
NEW
Ria MONEY TRANSFER OMMURUGA
பணம் அனுப்பும் சேவை
BANK CARD மூலம் RIAஇல் பணம் அனுப்பிக் கொள்ளலாம்
VISA / VISA Electron / EUROCARD MasterCard / Maestro

ஐரோப்பியப் பதிப்பு

# ஈழமுரசு®

முரசு 05 | 10 – 23 டிசெம்பர் 2019 | முழக்கம் 114

நல்ல நிலையில் கடந்த 4 வருடங்களாக இயங்கிவரும் BB Grill Bail விற்பனைக்கு
தொடர்புகளுக்கு:
07 64 08 93 83



## பிரான்ஸ் முடங்கியது

## தமிழர்களின் அமைதி
### கோத்தபாய போன்ற கடும்போக்குவாதிகளுக்கு சாதகமாக அமைந்துவிடும்

## நீண்ட பல்லுக்காரன் சிரித்தாலும் அழுதாலும் ஒன்று தான்

ஈரான்
## மக்கள் படுகொலை - மீண்டும் ஓர் எரிபொருள் யுத்தம்!

## சட்ட விதிகளை உடைத்தெறிந்த அரசியல் வரைவிலக்கணம்

## பிள்ளையைப் பார்த்துக் கொள்வதில் தாயை விட தந்தை உயர்ந்தவரா?

BHARATH
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20
Spécialitées Indienne et Srilankaise
www.restaurantbharath.com
www.cafe-bharath.com

V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92
E-mail: vtsuperstore@organge.fr

Gopal and co Supermarche
72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03

Mohan Jewellery Mart
3/4 Fois sans Frais
(Piéce d'identité + Rib + C.B)
பழைய நகைகளைக் கொடுத்து புதிய நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்
Mo: La Chapelle ou Gare du Nord
201,rue du fg. St. Denis 75010 Paris
Tel: 01 42 05 65 26 Fax: 09 50 31 01 82

IMPORT EXPORT
லாச்சப்பல்
நிஷான் சுப்பர் மார்சே
பல்பொருள் வாணிபம்
64, rue louis blanc, 75010 Paris
Tél./Fax: 01 44 72 06 03
M°: La Chapelle Gare du nord

குபேரன் GOLD HOUSE
உங்களின் மனதிற்குப் பிடித்தமான வடிவங்களில் உங்கள் தங்கநகைகளைச் செய்து கொள்ள...
4 rue Cail - 75010 Paris
Tél.: 06 95 35 46 83

Crédits - Solutions
வீடு வாங்குவதற்கும் அனைத்து விதமான கடன் தேவைகளிற்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்
திரு.சிவா: 0973255923 - 0665660305
Fond de Commerce மற்றும் Mur Commerciaux ஆகியவற்றிற்கு கடன் உதவிகள் செய்து தரப்படும்
2-4 rue de l'Orillon - 75011 Paris
email: creditssolutions@gmail.com

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04

# 8ஆம் ஆண்டு நினைவு வணக்கம்



**நாட்டுப்பற்றாளர்**
**அன்டனி பிரான்சிஸ் சந்தியோகு**
அவர்களின்

**8ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு**

**16.12.2019**
**திங்கட்கிழமை**

**மாலை 14:00 மணி**

இடம்: Cimetière de Limeil Brévannes ,
Allée des Tulipiers
94450 Limeil Brévannes

அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்

- ஈழமுரசு குடும்பம்

தொடர்புகளிற்கு
ஊடகமையம் 0781808116 ஈழமுரசு

---

பிரான்சில் உள்ள அனைத்துத் தமிழ்ச்சோலைப் பள்ளிகளும் இணைந்து வழங்கும்

# 21 வது அகவை முத்தமிழ் விழா
# 21ème Gala du Tamoulcholai 2019

காலம் : 21-12-2019 சனிக்கிழமை
நேரம் : 11:00 மணி
இடம் : LE MILLÉNAIRE
3 Place du 19 Mars 1962,
77176 Savigny-le-Temple
RER D Gare : Savigny-le-Temple

தமிழ்ச்சோலை-பிரான்சு Tamoulcholai-France

பிரான்சு மண்ணில் தமிழ் பயிலும் சிறார்களின் முத்தமிழ் வெளிப்பாடுகளைக் கண்டு களித்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தாய்நிலம் காணாத் தலைமுறை நாம்
புலம்பெயர் மண்ணில் வளர்கின்றோம்
மண்தனை மறந்தோர் நெஞ்சங்களில்
மாண்பினைப் புகட்டும் தமிழ்ச்சோலை

அன்றைய நாள் தமிழ்ச்சோலைகளின் வளர்ச்சி நிதிக்கான நல்வாய்பு சீட்டிழுப்பு இடம்பெறும்

மண்டப ஒத்துழைப்பு: Savigny-le-Temple தமிழ்ச் சங்கம்
பரிசுப் பொருட்களுக்கான ஒத்தாசை வழங்குவோர்
TRP PRIENTALE, BOUCHERIE GABARINA,
BARATHI, SRI BHAGAVAN, FRANPRIX BOBIGNY,
MOHAN JEWELLERY MART, RAAM, GOPAL & CO,
BALAVINAYAGAR, EURO RESTO SERVICE
KINGS TRAVELS, TREFELE MARCHE, BABA ALIMANTATION

நுழைவு : இலவசம் Entrée Gratuite

"நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்"
"NOTRE LANGUE MATERNELLE EST LA RACINE DE NOTRE BIEN ÊTRE"

தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் ASSOCIATION TAMOULCHOLAI
165 BD de la Villette, 75010 PARIS
Tél: 09 84 06 38 83
tamoulcholai@yahoo.fr www.tamoulcholai.fr

---


# LINGAM CONSEIL

À VENDRE À LOUER

பல வருடங்களுக்கும் மேலான அனுபவம் மிக்கவர்கள்.

**VOUS AVEZ UN PROJET IMMOBILIER?**

*VENDRE · ACHETER · INVESTIR*

- Conseil pour tout type de projet immobilier et commercial (Fonds de commerce/Local commercial)
- Obtention de crédits de financement
- Une grande expérience à votre service
- Simple, rapide et efficace

குறைந்த வட்டி





புதிய வீடுகள் கட்டும் பிரபல நிறுவனத்துடன் இணைந்து பணிபுரிகின்றோம்

உங்கள் விருப்பப்படி...
நீங்கள் தெரிவு செய்யும் இடத்தில்!

"CRÉDIT TAUX 0% SUR LE NEUF"

PROVEFA

LINGAM CONSEIL IMMOBILIER




83 Avenue de la République
93150 Le Blanc-Mesnil
RER B Le Blanc-Mesnil

1 Bis, Rue de la Réunion - 75020 Paris
Tél: 09.50.46.47.17 ou 07.67.98.84.45
M 2 AVRON M 9 BUZENVAL
Du lundi au samedi de 10h à 18h lingamconseil@hotmail.com

ஈழமுரசு
mediacentre ஊடகமையம்
முரசு 05 10 – 23 டிசெம்பர் 2019 முழக்கம் 114

“இந்தியாவின் இராணுவத் தலையீடும், ஆதிக்க விஸ்தரிப்புக் கொள்கையும், பயமுறுத்தல்களும் தென்னாசியாவின் சிறிய - பலங்குன்றிய - நாடுகளின் சமாதானத்திற்கும், உறுதி நிலைக்கும் பங்கம் விளைவிப்பதாக அமைந்துள்ளது.”

– தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்



# பிரான்ஸ் முடங்கியது




*(10.12.2019, செவ்வாய்க்கிழமை)*

கடந்த 5ம் திகதி வியாழக்கிழமை பிரான்ஸ் முழுவதும் ஆரம்பித்த வேலை நிறுத்தப் போராட்டம் பிரான்சை முற்றாக முடக்கியுள்ளது. புதிய ஓய்வூதிய சீர்திருத்தத்தினை எதிர்த்து பிரான்சின் தொழிற்சங்கங்கள் ஆரம்பித்துள்ள இந்த தொடர் போராட்டம் அரசுக்கு பெரும் பொருளாதார இழப்பையும், நெருக்கடியையும் ஏற்படுத்தி வருகின்றது.

பிரதமர் எடுவார் பிலிப்பின் ஓய்வூதிய திட்டத்தை எதிர்த்தே இந்த மாபெரும் வேலை நிறுத்தம் மற்றும் போராட்டம் இடம்பெற்று வருகின்றது. ஓய்வூதியத்தில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுத்த முனைவதால் இந்த எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. புதிய திட்டத்தின் மூலம் ஓய்வூதிய வயது வரம்பு மேலும் இரண்டு வருடங்கள் உயர்த்தப்பட்டுள்ளது. அத்துடன், சேவைக்காலத்தை பொறுத்து ஓய்வூதியத்தின் தொகையை மாற்றியமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஓய்வூதியத்தை 64 வயதுக்கு முன்னதாக கோரினால் ஓய்வூதிய தொகை வேறுபடும் என பல புதிய கட்டுப்பாடுகளை கொண்டுவந்துள்ளனர்.

அரசின் இந்த புதிய திட்டத்தை எதிர்த்து இந்த வேலை நிறுத்தம் மற்றும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இந்த போராட்டத்துக்கு முதலில் பிரான்சின் பொதுப் போக்குவரத்துச் சேவை நிறுவனங்களே அழைப்பு விடுத்திருந்தன. அதனைத் தொடர்ந்து பிரான்சின் முக்கிய தொழிற்சங்கமான CGT உட்பட ஏனைய பல தொழிற்சங்கங்களும் இணைந்துகொண்டதனால், பிரான்ஸ் முழுவதற்கும் இந்தப் போராட்டங்கள் விரிவடைந்துள்ளன. கிட்டத்தட்ட 90 வீதமான பொதுப் போக்குவரத்துகள் முடக்கப்பட்டு, சுற்றுலாத் தலங்கள் பல மூடப்பட்டு, பாடசாலைகள் இடைநிறுத்தப்பட்டு, விமான சேவைகள் முடக்கப்பட்டு, வணிக வளாகங்கள் உட்பட பல நிறுவனங்கள் மற்றும் அரச மருத்துவ சேவைகள் என்பனவும் முடக்கப்பட்டதால் பெரும் பின்னடைவான நாளாக இது பார்க்கப்பட்டுள்ளது. இவற்றைவிட இந்தப் போராட்டத்திற்கு காவல்துறையினரும் ஆதரவு வழங்கியதுடன் அவர்களும் போராட்டத்தில் இணைந்துகொண்டுள்ளனர். காவற்துறையினரின் ஓய்வூதியத்திலும், மற்றும் அவர்களிற்கான பிரத்தியேக ஊதியத்திலும் அரசாங்கம் சீர்திருத்தினை மேற்கொள்ள முனைந்துள்ளதால் அவற்றை எதிர்த்து இந்தப் போராட்டத்தினை அவர்கள் ஆரம்பித்தனர். பிரான்சின் முக்கிய பல அமைப்புக்கள் பல ஒன்றிணைந்து இந்தப் பாரிய எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்ததால் பிரான்ஸ் கடந்த வியாழக்கிழமை முற்றாக முடங்கியது. இதனால், கடந்த வியாழக்கிழமை ‘கறுப்பு வியாழன்’ என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 04ம் பக்கம்












ஈழமுரசு

"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

"MEDIACENTRE"
JOURNAL TAMOUL
bimensuel **Gratuit**

MEDIACENTRE
BP 40
93141 BONDY PDC,
France

Port: 00 33 781 808 116

இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com

**Le Président:** S.Pulenthiran
**தலைவர்:** சு.புலேந்திரன்

**Redacteur:** K.Jeisanthar
**பொறுப்பாசிரியர்:** கி.ஜெய்சந்தர்

**ஆசிரியர் பீடம்**
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
கந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
ச.ச.முத்து (பிரித்தானியா)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)

**விளம்பரம் / விநியோகம்**
அருளப்பு (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)

Impression:
POP,
30, rue Raspail,
93120 La Courneuve.

**பிரித்தானியா**
Mohan: 00 44 790 4631 883
@: eelamurazu.uk@gmail.com

**சந்தா விபரம்**
**வருட சந்தா**
**பிரான்ஸ்** 75€
**ஐரோப்பா** 85€
**ஏனைய நாடுகள்** 99€

**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.






TAMILPOLITY.COM


# பாலியல் இலஞ்சம் கோரும் தமிழ் அரசியல் கட்சிகள்!

தமிழ் அரசியல் கட்சிகளும் பாலியல் இலஞ்சம் கோருவதாக அண்மையில் நடைபெற்ற சர்வதேச அமைப்பொன்றின் கலந்துரையாடலில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பினால் கடந்த 27ம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் '**பாலியல் இலஞ்சம் - சவால்களும் தீர்வுகளும்**' என்ற தலைப்பில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடல் நிகழ்விலேயே இந்தக் குற்றச்சாட்டு வெளிவந்துள்ளது.

இக்கலந்துரையாடலில் சிறீலங்காவின் பிரதிக் காவல்மா அதிபர் பிரியந்த ஜயகொடி, சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஷியாமளா கோமேஸ் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ஷிரீன் சரூர் கலந்துகொண்டதுடன் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெனல் அமைப்பின் செயற்திட்டப் பொறுப்பதிகாரி சஷிடி மெல் நிகழ்வின் ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டார்.

இக்கலந்துரையாடலில் கருத்து வெளியிட்ட சிறீலங்காவின் பிரதிக் காவல்மா அதிபர் பிரியந்த ஜயகொடி கூறியதாவது, நாட்டில் இலஞ்சம் கோருதல் என்பது தண்டனைக்குரிய குற்றமாக இருக்கின்ற போதிலும், பாலியல் இலஞ்சம் தொடர்பில் விரிவாகப் பேசப்படுவதில்லை. பாலியல் இலஞ்சம் கோரும் செயற்பாடுகளினால் பெண்கள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்ற போதிலும், அதுகுறித்த முறைப்பாடுகளை அளிப்பதற்கு அவர்கள் முன்வருவதில்லை.

பாலியல் இலஞ்சம் தொடர்பில் முறைப்பாடு அளிப்பதற்கான பிரிவிற்கு மத்திய, வடமத்திய மாகாணங்களிலிருந்தே பெரும்பாலான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. வடமாகாணத்தில் இத்தகைய பிரச்சினைகள் இல்லை என்று கூறமுடியாது. உண்மையில் இது ஆழமாக ஆராயப்பட வேண்டிய ஒரு புற்றுநோயைப் போன்றதாகும். குறிப்பாக 30 வருடகாலம் யுத்தம் நிலைகொண்டிருந்த வடக்கில் மொழிப்பிரச்சினை மற்றும் நம்பிக்கையீனம் என்பன பாலியல் இலஞ்சம் தொடர்பில் முறைப்பாடளிப்பதற்குப் பெண்கள் முன்வராமைக்கான முக்கிய காரணமாக உள்ளது. குறிப்பாக 30 வருடகாலம் யுத்தம் நிலைகொண்டிருந்த வடக்கில் மொழிப்பிரச்சினை மற்றும் நம்பிக்கையீனம் என்பன பாலியல் இலஞ்சம் தொடர்பில் முறைப்பாடளிப்பதற்குப் பெண்கள் முன்வராமைக்கான முக்கிய காரணமாக உள்ளது.

உயர் கல்வி நிறுவனம், விசேட தேவையுடையோருக்கான பாடசாலை, தமிழ் அரசியல் கட்சி போன்றவற்றிலும் இத்தகைய பாலியல் இலஞ்சம் கோரும் செயற்பாடுகள் பதிவானமையை ஆராய்ந்தபோது கண்டறிய முடிந்தது. அதேபோன்று மட்டக்களப்பில் நுண்கடன் வழங்குனர்கள் பாலியல் இலஞ்சம் கோரியமையால் பல பெண்கள் தற்கொலை செய்துகொண்டார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு மாற்று அணி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிதான்

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**

இரண்டு பேரில் யார் அதிகம் கெட்டவர் என பார்த்து வாக்களிக்க வேண்டுமென மக்களை அச்சப்படுத்தி செய்யும் அரசியல், மக்களிற்கு எந்தவொரு நன்மையையும் ஏற்படுத்தாது. மக்களை அச்சப்படுத்தி வாக்கு கேட்காமல் தத்துவார்த்த ரீதியிலேயே நாம் பகிஷ்கரிப்பு கோரிக்கையை முன்வைத்தோம். அதை மக்கள் ஏற்கவில்லையென்பது கவலையாகத்தான் உள்ளது. ஆனால், எமது முடிவுகளை மக்கள் தாமதமாக புரிந்து கொள்வார்கள் என தெரிவித்துள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு மாற்று அணி என்றால் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிதான் என்றும் தெரிவித்துள்ளார்.

வட மாகாண சபை முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு பதிலான மாற்று அணி ஒன்றை ஏற்படுத்துவதற்கான கலந்துரையாடல்கள் தீவிரம் அடைந்துள்ள நிலையில், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் கடந்த 3ம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், நேற்றுவரை கொள்கை ரீதியாக எத்தகைய கருத்துக்களையும் கூறாதவர்கள் இன்று அவ்வாறு கூறுவதற்கான காரணம் என்ன என்பதை தமிழ் மக்கள் புரிந்து கொள்வார்கள். தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் நேற்றுவரை இருந்துவிட்டு இன்று மாற்று அணியைத் தேடுகின்றவர்கள் ஒன்று சேரும் இடம் இன்னும் ஒரு அணியாகத்தான் இருக்குமே தவிர அது மாற்று அணியாக இருக்காது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு மாற்று அணி என்றால் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிதான்.

எங்களைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் பதவிகள், சலுகைகள் எல்லாவற்றையும் அனுபவித்துவிட்டு அவர்களை வெளியேற்றப் போகிறார்கள் அல்லது பதவிக்காலம் முடிகின்ற தறுவாயில் வேறு வழியைத் தேடுவதற்காக எடுக்கும் முடிவுகள் மாற்று அணியாக இருக்கப்போவதில்லை என்றார்.

# பிரான்ஸ் முடங்...

இந்தப் போராட்டத்தால் பொதுப் போக்குவரத்துக்கள் பெருமளவில் செயலிழந்து போயுள்ளன. இதனால் வீதிகளில் வாகனங்களில் நெரிசல்கள் அதிகரித்து வீதிப் போக்குவரத்துக்களும் தடைப்பட்டன. இரண்டாவது நாளான வெள்ளிக்கிழமை பரிஸ் மற்றும் புறநகரப் பகுதிகளில் சுமார் 380 கிலோ மீற்றர் தூரத்திற்கு வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த வியாழக்கிழமை பிரான்ஸ் முழுவதும் பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன. முதல்நாள் ஆர்ப்




பாட்டத்தில் எட்டு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டதாக உள்துறை அமைச்சகம் தகவல் வெளியிட்டுள்ளது. ஆனால், CGT தொழிற்சங்கம் தாம் நாடு முழுவதும் 1.5 மில்லியன் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டதாக தெரிவித்துள்ளனர். 5ம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் கடந்த 24 வருடங்களில் பிரான்ஸ் கண்டிராத ஆர்ப்பாட்டமாக அமைந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

1995ம் ஆண்டு இதே போன்றதொரு ஓய்வூதிய சீர்திருத்தத்தை எதிர்த்து மாபெரும் ஆர்ப்பாட்டம் தொழிலாளர்களால் மேற்கொள்ளப்பட்டது. 1995 நவம்பர் - டிசம்பர் மாதங்களில் இடம்




பெற்ற அந்த போராட்டத்தில் 10 மில்லியன் மக்கள் வீதிகளில் இறங்கி போராடினார்கள். அப்போது நாட்டின் பிரதமராக அலான் யுப்பே அவர்கள் இருந்தார். சுமார் 45 நாட்கள் பொதுப் போக்குவரத்துக்கள் முற்றாக (100 வீதம்) முடங்கிப்போயிருந்தது. இறுதியில் பல்வேறு பேச்சுவார்த்தைகளின் பின்னர் எட்டப்பட்ட உடன்பாட்டின் பின்னரேயே போராட்டங்கள் கைவிடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

அப்போது எட்டப்பட்ட உடன்பாட்டிற்கு அமையவே இம்முறை 100 வீதமான போக்குவரத்து முடக்கப்படவில்லை. எனினும் இம்முறை 90 வீதமான போக்குவரத்துக்கள் முடங்கியுள்ளன.?

இதேவேளை, கடந்த ஓராண்டுக்கு மேலாக சனிக்கிழமைகளில் போராடிவரும் மஞ்சள் அங்கிப் போராட்டக்காரர்களும் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தியுள்ளனர். மஞ்சள் மேலங்கி போராட்டத்தின் 56வது வார போராட்டம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது அதிகளவானவர்கள் இந்தப் போராட்டத்தில் இணைந்துகொண்டனர்.

நிலைமை இவ்வாறிருக்க, இன்று 10ம் திகதி செவ்வாய்க்கிழமை மற்றுமொரு ஆர்ப்பாட்டத்துக்கு தொழிற்சங்கள் அழைப்பு விடுத்துள்ளன. திங்கட்கிழமை வரை போராட்டம் நீடித்துள்ள நிலையில், மீண்டும் புதிய ஆர்ப்பாட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பெருமளவில் நடைபெற ஏற்பாடாகியுள்ளன. இந்தப் போராட்டங்கள் எதுவரை தொடரும், அரசு பணிந்து வருமா அல்லது போராட்டம் 1995ம் ஆண்டைப் போன்று நீண்டு செல்லுமா? பிரான்சின் இந்த முடக்கம் நீங்கி எப்போது வழமைக்கு திரும்பும் என்பதும் இதுவரை தெரியவரவில்லை.

# கோத்தாவின் ஆட்டம் ஆரம்பம்

தமிழர்கள் மீதான இனப்படுகொலையை முன்னின்று நடத்திய சிறீலங்காவின் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, அந்நாட்டின் ஜனாதிபதியாக பொறுப்பேற்றது முதல் நடந்துவரும் நிகழ்வுகள் இலங்கைத் தீவில் தமிழ் மக்களின் இருப்பிற்கு அச்சமூட்டுவதாக அமைந்து வருகின்றன. இராணுவ முகாம்களுக்கான நில ஆக்கிரமிப்பு ஒருபுறம், பௌத்த விகாரைகள் அமைப்பதில் தீவிரம் என அரசும், சிங்களக் கடும்போக்குவாதிகள் களமிறங்கியிருக்கும் அதேவேளை, தமிழர் தாயகத்தில் இராணுவ ஆட்சி நடைபெறுவதுபோன்று இராணுவக் கெடுபிடிகளும் மீண்டும் அதிகரித்திருக்கின்றன. இராணுவத்தின் கெடுபிடிகளுக்கு வசதியாக விசேட வர்த்தமானி அறிவித்தலும் கோத்தபாய அறிவுறுத்தலுக்கு அமைய வெளியிடப்பட்டுள்ளது.

இராணுவ ஆட்சி நடைபெறும் நாட்டைப்போன்று முப்படையினரை கடமைகளில் ஈடுபடுத்துவதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் இது. இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படைக்கு கோத்தபாய ராஜபக்சவினால் இந்த சிறப்பு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சிறீலங்கா ஜனாதிபதிக்கு உள்ள சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தியே இந்த வர்த்தமானி அறிவித்தலை கோத்தபாய வெளியிப்பட்டுள்ளார்.

'மக்களின் அமைதியை சீர்குலைக்கும் வகையில் இடம்பெறும் ஏதேனும் குழப்ப நிலைமையின் போதே இந்த சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இராணுவத்தினருக்கு அதிகாரம் வழங்கப்படும் போது நாடாளுமன்றத்தின் அனுமதியை பெற வேண்டும்' என்று குற்றம்சாட்டியுள்ள முன்னிலை சோசலிச கட்சி, 'அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இல்லாத வேளையில் இவ்வாறு காவல் துறையினருடைய அதிகாரத்தை இராணுவத்தினருக்கு வழங்குவதனை ஏற்றுக்கொள்ள முடியாது, இராணுவத்தினருக்கு காவல்துறையினருடைய அதிகாரத்தை வழங்குதல் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை தடுத்து நிறுத்துமாறு' வலியுறுத்தி அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

எலி முயல் வேசம் போட்டாலும் வால் காட்டிக் கொடுக்கும் என்பதுபோல், தன்னை ஒரு ஜனநாயகவாதியாக கோத்தபாய காண்பிக்க முயன்றாலும் கடத்தல்களும் படுகொலைகளும், கடத்திச் சென்று விசாரணைகளும் என மகிந்த குடும்பத்தின் முன்னைய வெள்ளை வான் ஆட்சிக்கால நிகழ்வுகள் மீண்டும் அரங்கேறுவதைத் தவிர்க்க முடியவில்லை.

பாம்புக்கு விசம் பல்லில், தேளுக்கு விசம் கொடுக்கில், கோத்தபாயவிற்கு விசம் உடலெங்கும். முக்காலும் காகம் முழுகிக் குளிச்சாலும் கொக்காக முடியாது என்பது போல கோத்தபாயவினாலும் தனது இரத்தவெறியையும், இனவெறியையும், மதவெறியையும் கட்டுப்படுத்த முடியாது என்பதை பதவிக்கு வந்து இரு வாரங்களுக்குள் காண்பிக்கத் தொடங்கிவிட்டார்.

கோத்தாவின் ஆட்டம் ஆரம்பித்துவிட்டது.

அந்த ஆட்டத்தில் இருந்து சில விசத்துளிகள் இங்கே...

- சர்ச்சைக்குரிய முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தில் ஆக்கிரமித்து உருவாக்கப்பட்டுள்ள விகாரைக்கு புதிதாக பிரதிஷ்டை செய்ய 3.5 அடி உயரமான புதிய புத்தர் சிலை ஒன்று கடந்த 30ம் திகதி கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த பௌத்த விகாரையில் எந்தவித கட்டுமான பணிகளும் மாற்றங்களை செய்ய முடியாத அளவுக்கு நீதிமன்றத்தின் தடை உத்தரவு இருக்கின்ற போதும், அதனையும் மீறி குறித்த மூலஸ்தானத்துக்கான புத்தர் சிலையை கொண்டுவந்து விசேட பூசை வழிபாடுகளின் பின் வைத்துள்ளனர். கோத்தா ஆட்சிக்கு வந்த சில நாட்களிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.



- கோத்தபாய ராஜபக்ச பதவியேற்ற பின்னர் தேடுதல்கள், விசாரணைகள், அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது என்று இலங்கை பத்திரிகையாளர்கள் கூறுகின்ற கரிசனைகளை தாங்கள் பகிர்ந்துகொள்வதாக எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. 'டெர்மினேட்டர்' என அழைக்கப்படும் ராஜபக்ச சிறீலங்கா ஜனாதிபதியாக பதவியேற்று ஒரு வார காலத்திற்குள் இலங்கையின் பத்திரிகை சுதந்திரத்தின் மீது அதன் தாக்கம் தெரிய ஆரம்பித்துவிட்டது' என எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. 'கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சியின் கீழ் ஊடக சுதந்திரம் குறித்து கவலை தரும் சமிக்ஞைகள் வெளிவந்துள்ளன' என எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பின் ஆசியா பசுபிக்கிற்கான தலைவர் டானியல் பாஸ்டார்ட் தெரிவித்துள்ளார்.

- வலி வடக்கு தையிட்டியில் தனியார் காணியை ஆக்கிரமித்து இராணுவம் புத்த விகாரை கட்டி வருகின்றது. கடும் எதிர்ப்புக் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த இந்தப்பணி, ஆட்சி மாற்றத்திற்கு பின்னர் குறித்த விகாரையினை அமைக்கும் நடவடிக்கையில் இராணுவம் மிக மும்முரமாக செயற்பட்டு வருகின்றது. இதனை சட்ட ரீதியில் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்க சமூக அக்கறை கொண்ட சட்டத்தரணிகளும் அரசியல்வாதிகளும் முன்வர வேண்டும் என வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் எஸ்.சஜீவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

- போர்க்குற்ற விடயங்களை விமர்சிப்பதை விட, அந்த விடயங்களை மறக்குமாறு புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு கோத்தபாய கூறியுள்ளார். இதை பேசிக் கொண்டிருப்பதால் யாருக்கும் பயனில்லை. பெரும்பான்மை சமூகத்தின் மனதில் சந்தேகத்தை உருவாக்கும் சில விடயங்களை சிறுபான்மையினர் செய்தால் மட்டுமே பெரும்பான்மை சமூகம் எதிர்வினையாற்றும். அதை சிறுபான்மையினர் புரிந்துகொள்ள வேண்டும். இலங்கையில் பிறந்தால் எல்லோரும் இலங்கை குடிமக்கள். அவர்கள் எல்லோருக்கும் சம உரிமை உண்டு. ஆனால் சிறுபான்மையினர் சில விடயங்களைச் செய்யக்கூடாது. அவர்கள் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும் என இந்தியாவின் செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலில் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

- 'பெரும்பான்மை சமூகம் விரும்பாத எதனையும் இலங்கையில் செய்யமுடியாது என்று கோத்தபாய திரும்பத் திரும்ப கூறிவருகிறார். இலங்கையில் உள்ள எல்லா இன மக்களும் சமனாகக் கருதப்படவில்லை என்பதற்கு இந்தக் கூற்றே சிறந்த உதாரணமாகக் காணப்படுகின்றது' என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். 'வடகிழக்குத் தமிழ் மக்களே இலங்கையின் பூர்வீகக் குடிகள். சிங்கள மொழி நடைமுறைக்கு வந்தது கி.பி 6ம் அல்லது 7ம் நூற்றாண்டில், அதற்கு முன்னர் சிங்கள மொழி பேசுவோர் இலங்கையில் இருந்ததில்லை. வடகிழக்கில் இன்றும் நாமே பெரும்பான்மையினர். பின் எவ்வாறு சிங்களப் பெரும்பான்மையினர் விரும்பாத எதனையும் இலங்கையில் செய்ய முடியாது என்று எமது ஜனாதிபதி கூறலாம்' என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

- 'போர்க்குற்றங்கள் குறித்த பொறுப்புக்கூறல் விடயத்தில் முன்னைய அரசாங்கம் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் ஏற்றுக்கொண்ட விடயங்களை புதிய அரசாங்கம் முற்றாக நிராகரிப்பதாக' வெளிநட்டலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். 'போர்க் குற்றங்கள் நிருபிக்க எந்த ஆதாரங்களும் இல்லாது வெறுமனே ஒரு சிலர் கூறும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்வதை போலவே 2015ம் ஆண்டு ஜெனிவா கூட்டத்தொடரின் 30/1 பிரேரணைக்கு சிறீலங்கா அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியது. இது சிறீலங்கா அரசாங்கம் வழங்கியது என கூறுவதை விடவும் அப்போதைய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் தனிப்பட்ட தீர்மானம் என்றே கூறமுடியும். அமைச்சரவை அங்கீகாரம் இல்லாது, நாடாளுமன்றத்தில் இது குறித்த அனுமதியை பெற்றுக்கொள்ளாது தாமாக இணை அனுசரணை பிரேரணையை ஆதரித்தனர். எனினும் நாம் மீண்டும் இதனை பரிசீலிக்கவுள்ளோம்' என அவர் தெரிவித்தார்.

- கோத்தபாய பதவிக்கு வந்தபின் கொழும்பில் உள்ள சுவிட்சர்லாந்து தூதரகத்தில் கடமையாற்றும் பெண் ஊழியர் கடத்தப்பட்டு, சில மணி நேரம் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு, பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டதாக கூறப்படும் சம்பவம் இலங்கையில் மட்டுமல்ல சுவிஸ்சர்லாந்து அரசு மட்டத்திலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

- கனடாவில் வசித்துவந்த தம்பிராஜா அம்பலவானர் என்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர் இலங்கை சென்றபோது கொழும்பு வெள்ளவத்தையில் வைத்து கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். 26.11.2019 இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கொழும்பு வெள்ளவத்தையில் வைத்து கடத்தப்பட்ட அவரது சடலம் புத்தளத்தில் தொடருந்துத் தண்டவாளங்களுக்கு இடையில் போடப்பட்டிருந்தது. சித்ரவதை செய்யப்பட்ட காயங்கள் அவரது உடலில் காணப்பட்டதாக அவரது உறவினர்கள் தெரிவிக்கின்றார்கள். கொலைக்கான காரணமும் இதுவரை தெரியவில்லை.

கோத்தாவின் ஆட்டம் இத்துடன் முற்றுப்பெறவில்லை. இன்னும் அதிகமாகத் தொடரவே போகின்றது.

# கழுத்து வெட்டிக்குத் தண்டனை பிரித்தானிய நீதிமன்றம் அபராதம்

*2018ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ம் திகதி, சிறீலங்காவின் சுதந்திர தினத்தன்று பிரித்தானியத் தலைநகர் இலண்டனிலுள்ள சிறீலங்கா உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த புலம்பெயர் தமிழர்களைப் பார்த்து கழுத்தை வெட்டிக் கொலை செய்வதாக சைகைசெய்து அச்சுறுத்திய சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தைச் சேர்ந்த பிரிகேடியர் பிரியங்கர பெர்னாண்டோவுக்கு எதிரான வழக்கின் தீர்ப்பு கடந்த 6ம் திகதி இலண்டன், வெஸ்ட் மினிஸ்டர் நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. குற்றம்சாட்டப்பட்டிருந்த பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ குற்றவாளியென பிரித்தானிய நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அதன்படி, சுமார் 2400 பவுண்சுகள் அபராதம் விதிப்பதாக இலண்டன், வெஸ்ட் மினிஸ்டர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*பொது ஒழுங்கு சட்டத்தை மீறியதாக குறிப்பிட்டு, அவரை குற்றவாளியென வெஸ்ட்மின்ஸ்டர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இது தொடர்பாக வழக்கு தொடரப்பட்டபோது, நீண்ட சட்டப் போராட்டத்தை சிறீலங்கா நடத்தியது. முன்னர்*



*அவர் இராஜதந்திர விலக்கை பெற்றிருந்த போதும், இந்த வழக்கை மீள விசாரித்த நீதிமன்றம் அவர் குற்றவாளியென தீர்ப்பளித்துள்ளது.*

*பெப்ரவரி 4, 2018 அன்று கழுத்தை வெட்டும் சைகைகள் செய்யப்பட்டன என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை என்று தலைமை நீதவான் எம்மா அர்பூட்நாட் தனது தீர்ப்பில் தெரிவித்தார். போராட்டக்காரர்களிற்கு எதிராக அவரது உடல்மொழி திமிர் பிடித்ததாக இருந்ததாகவும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தார்.*

# விடுதலைப்புலிகள் ஒரு குற்றவியல் அமைப்பல்ல சுவிஸ் நீதிமன்றம் தீர்ப்பு நிதி திரட்டியவர்கள் விடுவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்தி போராடிய போதும் அது குற்றவியல் அமைப்பு அல்ல என சுவிஸ் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.



மேலும் விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரித்ததாக குற்றம்சாட்டப்பட்ட 12 தமிழர்களிற்கு எதிராக அந்த நாட்டின் சட்டமா அதிபர் திணைக்களம் சுமத்தியிருந்த குற்றச்சாட்டுகளில் இருந்து அவர்களை விடுதலை செய்துள்ளது.

1999 முதல் 2009ம் ஆண்டு வரையான காலப் பகுதியில் விடுதலைப் புலிகளிற்கு நிதி சேகரித்ததாக சுவிசின் குற்றவியல் கோவையை மீறியதாக 12 பேரிற்கு எதிராக சுவிஸின் சட்டமா அதிபர் அலுவலகம் குற்றச்சாட்டுகளை சுமத்தியிருந்தது. ஒன்பது வருட காலமாக மேற்கொண்ட விசாரணையின் பின்னர் உலகத் தமிழ் ஒருங்கிணைப்பு குழுவின் உறுப்பினர்களிற்கு எதிராகவே இந்த குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

எனினும் 2018 யூன் மாதம் சமஸ்டி நீதிமன்றம் விடுதலைப் புலிகளிற்கும் உலகத் தமிழர் ஒருங்கிணைப்பு குழுவிற்கும் இடையிலான தலைமைத்துவ தொடர்புகளிற்கான போதிய ஆதாரங்கள் இல்லை என சமஸ்டி குற்றவியல் நீதிமன்றம் தெரிவித்திருந்தது. கடந்த ஏப்பிரல் மாதம் சட்டமா அதிபர் திணைக்களம் இந்த தீர்ப்பிற்கு எதிராக முறையீடு செய்திருந்ததுடன் குற்றம்சாட்டப்பட்டவர்கள் குற்றவியல் அமைப்பிற்கு ஆதரவளித்துள்ளனர் என தெரிவித்திருந்தது.

இது குறித்து தனது தீர்ப்பை கடந்த 3ம் திகதி வெளியிட்டுள்ள சமஸ்டி நீதிமன்றம், தனது முன்னைய தீர்ப்பை மீண்டும் உறுதி செய்துள்ளது. சுவிசின் குற்றவியல் கோவையின் 260வது பிரிவு திட்டமிடப்பட்ட குற்றங்களை கட்டுப்படுத்துவதற்காகவே உருவாக்கப்பட்டது, அதன் பின்னர் அல்ஹைடா போன்ற அமைப்புகளிற்கு எதிராக பயன்படுத்தப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளது.

நிதி திரட்டப்படும் வேளை விடுதலைப்புலிகள் அமைப்பு குற்றவியல் அமைப்பாக கருதப்படவில்லை என நீதிமன்றம் தெரிவித்துள்ளது. அக்காலப் பகுதியில் சுவிட்சர்லாந்தில் விடுதலைப் புலிகளிற்காக நிதி திரட்டியவர்கள் தாங்கள் பின்னர் சட்டத்தை மீறுவார்கள் என கருதியிருக்க முடியாது எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பினர் பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டிருந்தாலும் அவர்களது பிரதான நோக்கம் இனசமூகத்திற்கு சுதந்திரத்தை பெற்றுக்கொள்வதே என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பிரான்ஸ் நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரித்தாக குற்றம்சாட்டி 2007ம் ஆண்டு ஏப்ரல் மாதம் சிலர் கைது செய்யப்பட்டு ஓரிரு ஆண்டுகள் சிறைத் தண்டனைக்குப் பின் விடுவிக்கப்பட்டனர். இலங்கையில் சிங்களப் பேரினவாத மகிந்த குடும்ப ஆட்சியாளர்கள் இன அழிப்புப் போரை தீவிரமாக முன்னெடுத்திருந்த நிலையில், பயங்கரவாதிகளுக்கு நிதி சேகரிப்பு எனக் குற்றம்சாட்டப்பட்டு மேற்கொள்ளப்பட்ட இந்தக் கைதுகள், தமிழர்களுக்கு மிகப்பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதுடன், சிங்களப் பேரினவாத அரசு தனது இனஅழிப்புப் போரை மேலும் தீவிரமாக முன்னெடுப்பதற்கு சாதகமான வழிகளை ஏற்படுத்திக் கொடுத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகில் அதியுயர் பதவிகளை வகிக்கும் 2வது சகோதரர்கள்

## மகிந்தவிடம் அதிக அதிகாரங்கள்!

இனப்படுகொலையாளியான சிறீலங்காவின் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச கடந்த வாரம் தனது சகோதரர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை பிரதமராக நியமித்ததன் மூலம் சிறீலங்காவின் ஆட்சியதிகாரத்தின் அதியுயர் இரு பதவிகளை வகிக்கின்ற சகோதரர்கள் என்ற வரலாற்றுச் சாதனையை அந்நாட்டில் படைத்திருக்கிறார்கள். உலகில் சகோதரர்கள் இருவர் ஜனாதிபதியாகவும், பிரதமராகவும் பதவி வகிக்கின்ற இரண்டாவது சந்தர்ப்பம் இது வென்பது குறிப்பிடத்தக்கது. கிழக்கு ஐரோப்பிய நாடான போலந்தில் 2006ம் ஆண்டு ஜனாதிபதியாகப் பதவி வகித்த லெச் காசின்ஸ்கி, ஒரே மாதிரியான தோற்றத்தைக் கொண்ட தனது இரட்டைச் சகோதரரான யாரோஸ்லோ காசின்ஸ்கியை பிரதமராக நியமித்திருந்தார்.



2005 டிசம்பர் மாதம் தொடக்கம் 2010 ஏப்ரல் மாதம் வரை ஜனாதிபதி லெச் காசின்ஸ்கி அப்பதவியை வகித்தார். பதவியிலிருந்த போதே அவர் மரணமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சிறீலங்காவின் குடும்ப ஆட்சியில், பிரதமரும் நிதியமைச்சருமாகவுள்ள மகிந்த ராஜபக்ச, பொருளாதார அலுவல்கள், கொள்கை அபிவிருத்தி, புத்த சாசனம், கலாசாரம், நீர் வழங்கல் மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு வசதிகள் அமைச்சராகவும் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதுஇவ்வாறிருக்க, ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகையில் வசிப்பதனை தவிர்ப்பதற்கு கோத்தபாய ராஜபக்சவும்?மகிந்த ராஜபக்சவும் தீர்மானித்துள்ளனர். கடமை நடவடிக்கைகளுக்கு மாத்திரம் உத்தியோகபூர்வ மாளிகையை பயன்படுத்துவதற்கு இருவரும் தீர்மானித்துள்ளதாக சிறீலங்கா அரசாங்க தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அதற்கமைய ஜனாதிபதி தற்போது வசிக்கும் நுகேகொடை, மிரிஹானவில் அமைந்துள்ள வீட்டிலும், பிரதமர் கொழும்பு 7 விஜேராம மாவத்தையில் உள்ள வீட்டிலும் தொடர்ந்து தங்கியிருப்பதற்கு தீர்மானித்துள்ளனர்.

# சிறீலங்காக் கடவுச் சீட்டில் பொட்டுக்குத் தடை






புதிதாக சிறீலங்காவின் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்பவர்கள் அல்லது தமது பழைய கடவுச்சீட்டை புதுப்பிக்கும் தமிழ்ப் பெண்கள் நெற்றிப்பொட்டுடன் படம் எடுப்பதை தவிர்க்க வேண்டும் என அந்நாட்டு குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்ப்பெண்களிடமிருந்து வந்த தொடர்ச்சியான முறைப்பாடுகளையடுத்து மேற்படி திணைக்களத்திடம் கேட்கப்பட்ட போதே அதன் ஊடகப் பேச்சாளர் பி.ஜி.ஜி.மிலிந்த இத்தகவலை வெளியிட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

தற்போது சர்வதேச நியமங்களின் அடிப்படையில் சிறீலங்கா கடவுச்சீட்டு தரப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே நாம் குறித்த சர்வதேச நியமங்களுக்கு கட்டுப்பட்டவர்களாக இருத்தல் அவசியம். சர்வதேச சிவில் விமான போக்குவரத்து அமைப்பானது புதிய கடவுச்சீட்டுக்கான படம் எப்படி இருக்க வேண்டும் என்ற வழிகாட்டுதல்களை எல்லா நாடுகளுக்கும் வழங்கியுள்ளது.

அதன்படி கடவுச்சீட்டிலுள்ள படத்தில் முகத்தில் எந்தவிதமான செயற்கை அடையாளங்களும் இருக்க முடியாது. ஆகையால் நாம் நெற்றியில் பொட்டிருப்பதை தவிர்க்கச்சொல்கிறோம் என்று கூறியுள்ளார்.

# தேர்தல் ஆணைக்குழுவிற்கு நல்ல வருமானம்! வருமானத்தை அதிகரிக்க மேலும் திட்டங்கள்

சிறீலங்கா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட 35 வேட்பாளர்களின் பிரதான இருவர் தவிர்ந்து ஏனைய 33 வேட்பாளர்களிடம் இருந்து 2.5 மில்லியன் ரூபாய்களை தேர்தல்கள் ஆணைக்குழு தனதாக்கியுள்ளது. இம்முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளின் வேட்பாளர் தலா 50 ஆயிரம் ரூபாயும், சுயேச்சை வேட்பாளர் தலா 75 ஆயிரம் ரூபாயும் கட்டுப்பணம் செலுத்த வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டது. அதேபோல் ஜனாதிபதி வேட்பாளர்கள் தேர்தலில் 12.5 வீத வாக்குகளுக்கு மேல் பெற்றால் கட்டுப்பணம் மீளவும் உரிய நபர்களுக்கு செலுத்தப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டிருந்த நிலையில், இம்முறை ஜனாதிபதி தேர்தலில் சிறீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தாபய ராஜபக்ச மற்றும் புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச ஆகிய இருவர் மட்டுமே 12.5 வீதத்தைதாண்டிய வாக்குகளைபெற்றுக்கொண்டனர்.

ஆகவே அவர்கள் இருவர் தவிர்ந்து ஏனைய 33 வேட்பாளர்களின் சார்பில் செலுத்தப்பட்ட 2.5 மில்லியன் ரூபாயும் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கே சொந்தமாகியுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கான கட்டுப்பணத் தொகையினை அதிகரிப்பது தொடர்பான ஒரு முன்மொழிவினை சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு முன்வைத்துள்ளது. அதன்படி ஒரு அரசியல் கட்சியின் சார்பில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் 25 இலட்சம் ரூபாவையும், சுயாதீன குழுக்கள் சார்பில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் 30 இலட்சம் ரூபாவினையும் கட்டுப்பணமாக செலுத்த வேண்டும். இதேவேளை மாகாண சபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கும் ஒரு சட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. அதன்படி ஒரு அரசியல் கட்சியிலிருந்து மாகாண சபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் 7,500 ரூபாவையும் ஒரு சுயாதீன வேட்பாளர் 5,000 ஆயிரம் ரூபாவையும் கட்டணமாக செலுத்த வேண்டும்.

# தமிழர்களின் அமைதி

## கோத்தபாய போன்ற கடும்போக்குவாதிகளுக்கு சாதகமாக அமைந்துவிடும்

'தாயகத்தில் இருந்து' காந்தரூபன்

சிறீலங்காவின் புதிய ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்ச பதவியேற்ற பின்னர் ஈழத் தமிழ் மக்களின் வாழ்வு கேள்விக்குறியாகி உள்ளது. அமைதியாகவும் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழவேண்டும் என்பதற்காக முப்பது ஆண்டுகளுக்கு மேலாக போராடிய தமிழினம் இன்று நாதியற்று நிற்கின்ற நிலையில், கோத்தபாயவின் வருகை இவர்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளியிருக்கின்றது.

ஆயுதப் போராட்டம் பெரும் இழப்புகளுடன் முடிவுக்கு வந்த பின்னர், இனிமேல் உள்ளக சுயாட்சியுடன் கூடிய சமஷ்டித் தீர்வு ஒன்றைப் பெற்று வாழலாம் என்ற எண்ணம் கொண்டிருந்த தமிழர் தரப்புக்கு கோத்தபாயவின் வருகை பேரிடியாக அமைந்திருக்கின்றது. தமிழர் தாயகத்தில் இனிமேல் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழவே முடியாது என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது.

தமிழீழம் என்ற உயரிய தனித் தாயக இலட்சியத்தோடு நகர்ந்த தமிழர்களின் போராட்டம் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்ட நிலையில், 2009 ஆம் ஆண்டு ஆயுதங்களின் மௌனிப்போடு முடிவுக்கு வந்தது. கடந்த காலத்தில் ராஜபக்ச கம்பனி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் எனக்கூறி யுத்தம் செய்து, மக்களை அழித்தொழித்த பின்னர் எல்லாவற்றையும் ஒரே குடைக்குள் கொண்டுவர முயற்சி எடுத்தது. தற்போது மீண்டும் ராஜபக்ச கம்பனியின் ஆட்சி தழைத்திருக்கின்றமையானது ஈழத் தமிழர் வாழ்வில் எழுச்சிக்கு பதிலாக வீழ்ச்சியையே கொண்டுவந்து தந்திருக்கின்றது.

அண்மையில் இடம்பெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச வெற்றிபெற்ற பின்னர் ஈழத்தமிழர் அரசியலின் திசை மாறியிருக்கின்றது. விட்ட இடத்தில் இருந்து தொடர்வோம் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றையாட்சி அரசியலமைப்புக் கூட புஷ்வாணமாகியிருக்கின்றது. அந்த அரசியலமைப்பில் தமிழ் மக்களுக்கு எதுவுமே இல்லாத நிலையிலும் அதைக்கூட நிறைவேற்றுவதற்கு கோத்தபாய ராஜபக்ச தரப்பு தயாராக இல்லை.

மேலும், அண்மையில் கோத்தபாய ராஜபக்சவின் இந்தியப் பயணம் தமிழ் மக்களுக்கு பல விடயங்களை வெளிப்படுத்தியிருக்கின்றது. தமிழ் மக்கள் விடயத்தில் கோத்தபாய என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றார் என்பதை அவரது இந்தியப் பயணம் வெளிச்சம் போட்டுக் காட்டியது. கோத்தபாய ராஜபக்சவும் மகிந்த ராஜபக்சவைப் போன்று தமிழர்களை ஒடுக்கும் இராஜதந்திர அரசியல் நகர்வில் கைதேர்ந்தவர் என்பதையும் அது வெளிக்காட்டியது.

கோத்தபாயவிற்கு முன்னால், தமிழ் மக்களில் தமக்கு அக்கறை இருப்பதைப் போல வெளிப்படுத்திக்கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக் தீர்வு காண்பதற்கான முனைப்புக்களில் ஈடுபடுங்கள் என கோத்தபாயவை வலியுறுத்தியிருந்தார். இலங்கை - இந்திய ஒப்பந்த அடிப்படையில் உருவாக்கப்பட்ட 13 ஆவது அரசியலமைப்பு சரத்தை நடைமுறைப் படுத்துமாறும் மோடி கோத்தபாயவைக் கேட்டிருந்தார்.

ஆனால், இந்தியப் பிரதமரின் இந்தக் கோரிக்கையை இந்தியாவில் வைத்தே மறுத்திருக்கின்றார் கோத்தபாய. அரசியலமைப்பின் 13 ஆவது சரத்தில் கூறப்பட்ட பல விடயங்கள் ஏற்கனவே நாட்டில் நடைமுறையில் உள்ளது என்பதை சுட்டிக்காட்டிய கோத்தபாய, 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது என இறுமாப்போடு கூறினார்.



**கோத்தபாயவின் நகர்வுகளுக்கு எதிராக - அல்லது கோத்தபாவின் தமிழின விரோத செயற்பாட்டை தடுத்து நிறுத்தி அதில் இருந்து தமிழ் மக்களின் விடுதலைக் கோரிக்கையை முன்கொண்டு செல்வதற்கு - தமிழர் தரப்பு என்ன உத்தியைக் கையாளப்போகின்றது என்பதை இதுவரை தமிழ்த் தலைமைகள் வெளிப்படுத்தவில்லை.**

மேற்படி 13 ஆவது திருத்தம் என்பது தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமையாது என்பதை அது கொண்டுவரப்பட்ட 1987 ஆம் ஆண்டு பல தரப்புக்களும் தெரிவித்தன. தமிழ் மக்களின் தேர்தல் அரசியல் அணியாக அப்போதிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதை நிராகரித்திருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக தமிழீழத் தேசியத் தலைவர், 13 ஆவது திருத்தத்தை உடனடியாகவே நிராகரித்திருந்தார். முழுமை பெறாத சரத்து ஒன்றை தீர்வு என்ற பெயரில் திணிக்க முற்பட்ட இந்திய - இலங்கை கூட்டுச் சதி முயற்சியை உணர்ந்துகொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் மதிநுட்பம் பின்னாளில் விதந்துரைக்கப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டிய விடயமாகும்.

13 இல் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய விடயம் ஒன்று உள்ளது எனில், அது வடக்கு - கிழக்கு இணைப்பு மட்டுமே ஆகும். இலங்கைத் தீவை ஒன்பது மாகாணங்களாகப் பிரித்து, அதில் வடக்கு - கிழக்கு மாகாணத்தை தனியான ஓர் அலகாக இணைத்து அது தமிழர்களுக்குரிய தனி அலகு என அடையாளப் படுத்தப்பட்டது. ஆனால், இணைந்த இந்தப் பிராந்தியத்திற்கான அதிகார வரையறுப்பு தொடர்பாக 13 ஆவது திருத்தத்தில் எந்தவித கருத்தும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டு காணி, காவல்துறை அதிகாரத்துடன் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வு ஒன்றே தமிழர்களுக்கு தேவை என்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு 13 ஆவது சரத்து சாதகமாக அமையவில்லை. ஏதுமற்ற அந்த வெற்றுக் காகித நகலைக்கூட நடைமுறைப் படுத்த முடியாது எனக் கூறிய கோத்தபாய ராஜபக்ச, தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத்தருவார் என நம்பமுடியாது.

தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் இருக்கின்றன என்பதையே ஏற்றுக்கொள்ளாத கோத்தபாயவிடம் இருந்து தீர்வை தமிழ் மக்கள் எதிர்பார்க்க முடியாது. தேர்தல் காலத்தில் அவரால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில்கூட தமிழ் மக்கள் தொடர்பாக எதையுமே அவர் வெளிப்படுத்தியிருக்கவில்லை. கோத்தபாயவுடன் நெருங்கி இருப்பவர்கள், தமிழர் மக்களுக்கு பிரச்சினையே இல்லை எனக்கூறும் தரப்பு எப்படித் தீர்வை முன்வைக்கும்?

கோத்தபாயவின் வரவுக்கு பின்னர் தமிழர் தாயகத்தில் இராணுவ நெருக்குவாரங்கள் அதிகரித்துள்ளன. திடீர் திடீரென சோதனைகள் இடம்பெறுகின்றன. கடந்த காலங்களில் தமிழ் மக்களை, குறிப்பாக தமிழ் இளைஞர்களை அச்சமூட்டிய 'பீல்ட் பைக் குறூப்' களின் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 18ம் பக்கம்

பரிஸ்தமிழ் www.ParisTamil.Com .கொம்
பிரான்ஸ் செய்திகள்
பிரான்ஸ் நிர்வாக தகவல்கள் — தமிழில்
WWW.PARISTAMIL.COM

## தேசிய புலனாய்வு பணிப்பாளராக மேஜர் ஜெகத்

சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஜெகத் டி அல்விஸ் மீண்டும் சேவைக்கு அழைக்கப்பட்டு தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவராக (சிஎன்ஐ) நியமிக்கப்படவுள்ளார் என கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. கஜபா ரெஜிமென்ட்டின் முன்னாள் மூத்த அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜெகத் டி அல்விஸ், யாழ்ப்பாணத்திற்கான சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி உட்பட பல முக்கிய பதவிகளை வகித்துள்ளார். மகிந்த ராஜபக்ஷெ ஜனாதிபதியாக இருந்த போது, உருவாக்கப்பட்ட ஜனாதிபதி காவல் படையின் தளபதியாகவும் பணியாற்றினார். இஸ்ரேலுக்கான சிறீலங்காத் துணைத் தூதுவராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

## சீன அன்பளிப்புக்கள்

சீன அரசாங்கத்தின் நிதி உதவியில் சிறீலங்காவிற்கு 75 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான 187 உந்துருளிகள் வழங்கப்பட்டுள்ளன. இவை சிறீலங்கா காவல் நிலையங்களுக்கு பரிர்ந்தளிக்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பிலுள்ள காலாட்படை தலைமையகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறீலங்காவிற்கான சீன தூதுவர் மற்றும் முன்னாள் இனப்படுகொலை இராணுவத்தளபதியும் தற்போதைய சிறீலங்கா பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

## ஆப்கானிஸ்தான் பெண்கள் அமைப்பு யாழ் வருகை

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த பெண்கள் அமைப்பு ஒன்றின் உறுப்பினர்கள் 30 பேர் கடந்த 2ம் திகதி யாழ்ப்பாணத்



தின் பல பகுதிகளுக்கும் சென்று பொது மக்களை சந்தித்து கலந்துரையாடியது. திண்ணைவேலி காளிகோவிலடியில் உள்ள முன்பள்ளியில் பொது மக்களை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர். யுத்த காலத்தில் தமிழ் மக்கள் சந்தித்த



துயரங்களை எவ்வாறு எதிர்கொண்டனர் எனும் அனுபவத்தை கேட்டறிந்து கொண்டனர். அத்துடன் ஆப்கானிஸ்தானில் இராணுவத்தினரால் ஏற்பட்ட



துயரங்களை தாம் எவ்வாறு தாங்கிக் கொண்டோம் என தமது அனுபவத்தினையும் பகிர்ந்து கொண்டனர்.

# செய்திகளும் எழும் கேள்விகளும்



திருமகள்

**செய்தி:-** இந்திய அரசாங்கத்துடன் புரிதலின்மை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு இனி வரும் காலங்களில் வெளிப்படைத் தன்மையோடு தங்களின் அரசாங்கம் நடந்து கொள்ளும் என்று சிங்கள அதிபர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

**எழும்கேள்வி:-** அப்படி என்றால் கடந்த காலத்தில் வெளிப்படைத் தன்மையின்றித் தான் இந்தியாவோடு தனது சகோதரர் மகிந்த ராஜபக்சவின் அரசாங்கம் நடந்து கொண்டது என்பதைக் கோத்தபாய ஒப்புக் கொள்கின்றாரா?

♦ ♦ ♦ ♦ ♦

**செய்தி:-** இலங்கைக்கான சீனத் தூதுவராகத் தான் பதவி வகித்த பொழுது ஆண்டுதோறும் வெறும் நாற்பதுனாயிரம் சீனச் சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்து சென்றதாகவும், தற்பொழுது அது இரண்டரை இலட்சமாக உயர்ந்திருப்பதாக சீன சிறப்புப் பிரதிநிதி வூ ஜியாங்க்ஹாவோ சிங்களப் பிரதமர் மகிந்த ராஜபக்சவிடம் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.



**எழும்கேள்வி:-** ஆண்டு தோறும் இரண்டரை இலட்சம் சீனச் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகின்றார்கள் என்பதற்காகக் கொழும்பில் உள்ள வீதிப் பெயர்ப் பலகைகள் சீன மொழியில் எழுதப்படுகின்றன என்றால், முழுச் சீனர்களும் இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளாக வந்தால் நாட்டின் கதி என்னவாகும்?

♦ ♦ ♦ ♦ ♦

**செய்தி:-** தனது அரசியல் பயணத்தைத் தான் இன்னமும் முடிக்கவில்லை, மீண்டும் தான் எழுச்சி கொள்வேன் என்று முன்னாள் சிங்கள அதிபர் மைத்திரிபால சிறீசேன அறிவித்துள்ளார்.

**எழும்கேள்வி:-** மகிந்த ராஜபக்சவின் பாணியில் அடுத்த அதிபர் தேர்தலில் தனது சகோதரரைக் களமிறக்கிப் பிரதமராகத் தான் பதவியேற்பதற்குச் சிறீசேன திட்டமிடுகின்றாரோ?

♦ ♦ ♦ ♦ ♦

**செய்தி:-** வெள்ளை சிற்றூர்தியில் கடத்தப்பட்டு பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சுவிஸ் தூதரக உள்ளூர் பணியாளரை சிறீலங்கா காவல்துறைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை செய்து உண்மையை வெளிக் கொணர விடாமல் அவரை சுவிஸ் தூதுவர் தடுத்து வைத்திருப்பதாக கோத்தபாய ராஜபக்சவின் நண்பரும், பிவித்ரு ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில குற்றம் சுமத்தியுள்ளார்.

**எழும்கேள்வி:-** குறித்த சுவிஸ் தூதரகப் பணியாளரை மீண்டும் கடத்திக் காணாமல் ஆக்குவதற்கு சிறீலங்கா அரசாங்கம் திட்டமிடுகின்றதோ?

♦ ♦ ♦ ♦ ♦

**செய்தி:-** தமிழ் மக்களுக்கு அதிகாரம் பரவலாக்கம் செய்யப்படுவதை பெரும்பான்மையர்களான சிங்கள மக்கள் விரும்ப மாட்டார்கள் என்பதால் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் நெறிக்கப்பட்டுள்ள காவல்துறை அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவதற்கான சரத்துக்களை அமுல்படுத்த முடியாது என்று கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

**எழும்கேள்வி:-** இதை எல்லாம் கோத்தபாய ராஜபக்ச கூறித் தான் தமிழ் மக்கள் தெரிந்து கொள்ள வேண்டுமா? எந்தக் காலத்திலும் தங்களுக்கு எந்த அதிகாரத்தையும் சிங்களம் வழங்காது என்பது தமிழர்களுக்குத் தெரியாதா என்ன?

♦ ♦ ♦ ♦ ♦

**செய்தி:-** இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவதிலேயே இந்தியாவின் பாதுகாப்புத் தங்கியுள்ளது என்று முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எச்சரித்துள்ளார்.

**எழும்கேள்வி:-** காலம் காலமாக எல்லோரும் அரைத்துப் புளித்துப் போன மாவை எத்தனை காலத்திற்குத் தான் விக்னேஸ்வரனும் அரைக்கப் போகின்றார்?

# அவலச் சாவுகளும் அகால மரணங்களும்

## கிணற்றில் விழுந்து இரு சிறுவர்கள் பலி

திருகோணமலை மணவெளி பகுதியில் 4 வயது சிறுவன் ஒருவன் கிணற்றில் விழுந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளான். இச்சம்பவம் கடந்த 7ம் திகதி இடம்பெற்றது. மீட்கப்பட்ட சிறுவன் செல்வராஜா சினியோன் எனவும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, யாழ்.அராலி கிழக்கு வட்டுக்கோட்டைப் பகுதியில் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் ஒருவர் தவறுதலாக கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார். கடந்த 4ம் திகதி புதன்கிழமை மாலை இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. வீட்டில் தாயும் தந்தையும் வெளியில் சென்றிருந்த வேளை குறித்த சிறுவன் தனிமையில் விளையாடிக் கொண்டிருந்த போது கிணற்றில் தவறி விழுந்துள்ளார். உயிரிழந்த சிறுவன் குகதீசன் நருஜன் (வயது 5) என தெரியவந்துள்ளது.

## புளியங்குளத்தில் உந்துருளி விபத்தில் இளைஞர் பலி!

வவுனியா, புளியங்குளத்தில் இடம்பெற்ற கோரவிபத்தில் வத்தளை இளைஞரொருவர் சம்பவ இடத்தில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி உந்துருளியில் சென்ற இரு இளைஞர்கள் ஏ9 வீதியில் நின்ற மாட்டுடன் மோதியுள்ளனர். இந்நிலையில் தூக்கி வீசப்பட்ட இரு இளைஞர்களும் எதிரில் வந்த பேருந்துடன் மோதிய நிலையில் குறித்த இளஞன் உயிரிழந்துள்ளார். இந்த விபத்தில் வத்தளையை சேர்ந்த 21 வயதான கிருபாகரன் துஷ்யந்தன் என்ற இளைஞரே பலியாகியுள்ளார். அத்துடன் அவருடன் பயணித்த ரஞ்சித்குமார் என்ற இளைஞன் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளார். இதேவேளை இளைஞர்களின் உந்துருளியில் மோதுண்ட மாடும் உயிரிழந்துள்ளது.

## கனடா செல்வதற்கு தயாராக பெண் பலி?



ஓமந்தையில் கடந்த வாரம் இரவு முச்சக்கர வண்டி வான் விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்தார். கனடா செல்லத் தயாரான நிலையில், உறவினருக்கு சொல்லி விட்டு திரும்பி வந்த வேளையில் விபத்தில் உயிரிழந்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த மாதம் 29ம் திகதி கிளிநொச்சியிலுள்ள உறவினர்களுக்கு கடனாவிற்கு செல்வதற்கு விசா கிடைத்துவிட்டது. டிசம்பர் 2ம் திகதி கனடாவிற்கு செல்லவுள்ளதாக தகவல் தெரிவித்துவிட்டு திரும்பியுள்ளார். வவுனியா குட்சைட் வீதியிலுள்ள வீட்டிற்கு தனது கணவருடன் முச்சக்கரவண்டியில் திரும்பிக் கொண்டிருந்தபோது, இரவு ஓமந்தை – விளக்குவைத்தகுளம் பகுதியில் வீதியில் படுத்திருந்த மாடு ஒன்றுடன் எதிரே வந்த வான் ஒன்று மோதி நிலை தடுமாறி,வவுனியாவிற்கு சென்றுகொண்டிருந்த முச்சக்கரவண்டியுடன் மோதியுள்ளது. இதன்போது கனடாவிற்கு செல்லத்தயாராகிய இரமணிசுந்தர் இராஜசுலோசனா (வயது 62) படுகாயமடைந்த நிலையில் பின்னர் உயிரிழந்துள்ளார். இவரது கணவர் காயமடைந்து சிகிச்சைபெற்று வருகின்றார்.


## மின்சாரம் தாக்கி யாழ்.பல்கலைக்கழக மாணவன் பலி?

கிளிநொச்சி – சிவநகர், உருத்திரபுரம் பகுதியில் மின்சாரம் தாக்கி யாழ்.பல்கலைக்கழக மாணவனொருவன் உயிரிழந்துள்ளார். கடந்த 30ம் திகதி சனிக்கிழமை காலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் உருத்திரபுரம் பகுதியைச் சேர்ந்த விக்னராசா சாரங்கன் என்ற இளைஞனே (22 வயது) உயிரிழந்துள்ளார். சிவநகர் பகுதியில் அமைந்துள்ள குறித்த இளைஞனின் தந்தைக்கு சொந்தமான அரிசி ஆலையில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. அரிசி ஆலையிலுள்ள பகுதி ஒன்றில் வெள்ள நீர் காணப்பட்டுள்ளது. குறித்த வெள்ள நீரை மோட்டார் ஊடாக இறைத்து வெளியேற்ற முற்பட்டபோது மின்சாரம் பாய்ந்ததில் குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

## கடலில் மாயமான இளைஞன் சடலமாக மீட்பு



யாழ்ப்பாணம் – காங்கேசன்துறை கடலில் குளிக்கச் சென்ற இளைஞரொருவர் கடலில் அடித்துச் செல்லப்பட்டுள்ள நிலையில் கடந்த 6ம் திகதி காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். செல்வநாயகம் அலெக்சாண்டர் என்ற 21 வயதுடைய இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மாத்தறை பகுதியில் இருந்து குறித்த இளைஞன் யாழ்ப்பாணத்தில் மூன்று மாத கிறிஸ்தவ கற்கை நெறிக்காக வந்திருந்த நிலையில் கற்கை நெறி முடியும் தறுவாயில் காங்கேசன்துறை தல்செவன கடற்கரைக்கு நண்பர்களுடன் நீராட சென்றிருந்த வேளையிலேயே குறித்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

சொகுசுப் பேருந்து சேவை / LOCATION D'AUTOCARS
LOURDES, ESPAGNE, PORTUGAL & PARTOUT EN EUROPE
எங்களிடம் 16 முதல் 77 இருக்கைகள் கொண்ட
சொகுசுப் பேருந்துகள் தமிழ் சாரதிகளுடன் வாடகைக்கு உண்டு
THE TRAVEL COMPANY
Tél: 01 34 29 08 51 / Mob: 06 58 75 05 09
thetravelcompanyparis@gmail.com

# மேற்குலகம் தமிழர்களைக் கைவிடுகின்றதா, கையாள்கின்றதா? 3

மக்களுக்கு இழைக்கப்பட்டது இனவழிப்பு என்பதை நிரூபிப்பதற்கு எம்மிடம் நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன' என்று குறித்த பெண் முதலீட்டாளர் சீற்றத்துடன் கூறினார்.

றொல்பேர்ற் அவர்களோ விடவில்லை. 'தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதை மட்டும் தான் உங்களால் நிரூபிக்க முடியும். தமிழினத்தை அழிக்கும் நோக்கத்தோடு தான் இந்தப் படுகொலைகள்

கலாநிதி
ர.சிறீஸ்கந்தராஜா

## சட்ட விதிகளை உடைத்தெறிந்த அரசியல் வரைவிலக்கணம்

'தமிழர்களுக்கு இழைக்கப்பட்டது இனவழிப்பு என்பதை உங்களால் நிரூபிக்க முடியாது. எனவே இனவழிப்பு என்ற சொற்பதத்தைக் கைவிட்டு அதற்குப் பதிலாக மானிடத்திற்கு எதிரான குற்றங்கள் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் உங்கள் நகர்வுகளை மேற்கொள்வது தான் உசிதமானது.'

வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போன்று மிகவும் அமைதியாகவும், எந்த விதமான சலனமும் இன்றி அவர் பேசிக் கொண்டிருந்தார். அவர் ஒரு மூத்த சட்டத்தரணி. பெயர் டேவிட் றொல்பேர்ற். அமெரிக்காவின் வட கரலீனா மாநிலத்தில் இயங்கும் டியூக் பல்கலைக் கழகத்தின் வருகை நிலைப் புலமையாளராகப் பணிபுரிபவர். லெபனானில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்களை விசாரணை செய்வதற்கென்று உருவாக்கப்பட்ட தீர்ப்பாயத்தின் பதிவாளராகவும், கம்போடியாவில் நிகழ்ந்த கொடூரங்களை விசாரணை செய்வதற்கென்று உருவாக்கப்பட்ட நீதிப் பொறிமுறையில் சிறப்பு ஆலோசகராகவும், யூகொஸ்லாவியாவில் இடம்பெற்ற இனப் படுகொலைகளை விசாரணை செய்வதற்கென்று உருவாக்கப்பட்ட தீர்ப்பாயத்தின் பிரதி வழக்குத் தொடுநராகவும் கடந்த காலங்களில் பணிபுரிந்தவர். எமக்கு அறிவுரை வழங்கவென சுவிஸ் வெளியுறவுத் துறை அமைச்சு தேர்ந்தெடுத்திருந்த நிபுணர்களில் இவர் தான் மூத்தவர்.

19.10.2019 சனிக்கிழமை மதியம் சுவிஸ் அரசாங்கம் வழங்கிய சுவையான உணவை அருந்திய மயக்கத்தில் இருந்த புலம்பெயர் தமிழ் அமைப்புக்களில் பெரும்பாலானவர்கள் மயக்கம் தெளிந்தவர்களாகக் காணப்பட்டார்கள். டேவிட் றொல்பேர்ற் மேலும் பேசத் தொடங்கினார்:


'யூகொஸ்லாவியாவில் நிகழ்ந்த இனவழிப்பை விசாரணை செய்வதற்கென்று ஐ.நா. மன்றம் உருவாக்கிய தீர்ப்பாயத்தால் பத்தாயிரம் சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டார்கள். ஆனால் இவர்கள் எல்லோரையும் நாம் விசாரணை செய்வதென்றால் குறைந்தது நானூறு வருடமாவது எடுத்திருக்கும். எனவே கனத்த மனத்துடன் ஒரு சிலருக்கு எதிராக மட்டுமே வழக்குத் தாக்கல் செய்வதற்கு நாங்கள் முடிவு செய்தோம்.'

அவர் பேசப் பேச அங்கிருந்த புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு ஒரு விடயம் புரியத் தொடங்கியது. தமிழின அழிப்பை பன்னாட்டு நீதிப்பொறிமுறை ஒன்றின் ஊடாக விசாரணைக்கு உட்படுத்துவது சாத்தியமில்லை என்ற செய்தியை நாசூக்காக வழங்குவது தான் அவரதும், சுவிஸ் அரசாங்கத்தினதும் நோக்கமாக இருந்தது.

றொல்பேர்ற் அவர்களின் விரிவுரை நடப்பதற்கு அரை மணிநேரத்திற்கு முன்னர் தான் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தமது மீட்பர்களாகப் பெரும்பான்மையான புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் முன்னிறுத்தியிருந்தார்கள். அச் சந்தர்ப்பத்தில் இன்னொரு கேள்வியையும் அங்கிருந்த தமிழ்ப் பிரதிநிதிகளை நோக்கி சுவிஸ் வெளியுறவுத் துறை அமைச்சின் இராசதந்திரி மார்டின் ஸ்ரேசிங்கர் அவர்கள் தொடுத்திருந்தார்.

'தமிழர்களுக்கு இழைக்கப்பட்டது இனப்படுகொலையா?' என்பது தான் அக்கேள்வி. அக் கேள்விக்கு முன்னரைப் போன்று பதினேழு பிரதிநிதிகள் 'ஆம்' என்று பதிலளித்திருந்தார்கள். முன்னைய கேள்விக்கு நடுநிலை பேணியது போன்று இக் கேள்விக்கும் இம்மானுவேல் அடிகளாரின் அமைப்பைச் சேர்ந்த முன்னாள் ஈரோஸ் இயக்கப் பிரமுகரும், காங்கிரஸ் என்ற விகுதிப் பெயரைக் கொண்ட கனடிய அமைப்பின் பிரதிநிதியும் மதில்மேல் பூனைகளாக நடுநிலை பேணிய வண்ணம் இருந்தார்கள்.

இக் கேள்வி நேரத்தைத் தொடர்ந்து நடைபெற்ற அமர்வில் தான் இனவழிப்பு என்ற சொற்பதத்தைத் தமிழர்கள் தவிர்க்க வேண்டும் என்ற கருத்தை டேவிட் றொல்பேர்ற் அவர்கள் முன்வைத்த வண்ணம் இருந்தார்.



டேவிட் றொல்பேர்ற் அவர்களின் விரிவுரை நிறைவடையும் வரை பொறுமை காக்கும் நிலையில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலர் இருக்கவில்லை. பீறிட்டு வந்த உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாதவர்களாக ஒரு சிலர் அவரது விரிவுரைக்கு இடையே குறுக்கிட்டு கேள்விக் கணைகளைத் தொடுத்தார்கள். கடைசியில் மார்டின் ஸ்ரேசிங்கர் அவர்களுக்கு உதவியாக நியமிக்கப்பட்டிருந்த சப்ரீனா பூச்சிலர் என்ற இராசதந்திரி தலையிட்டு, டேவிட் றொல்பேர்ற் பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறும், அவர் பேசி முடித்ததும் அனைவரும் கேள்விகளைக் கேட்கலாம் என்று கூறிய பின்னர் தான் அவர்கள் அமைதியானார்கள்.

. . . . . .

ஒருவாறு டேவிட் றொல்பேர்ற் அவர்களின் விரிவுரை நிறைவடைந்ததும், புலம்பெயர் தமிழ் பிரதிநிதிகள் தரப்பில் இருந்து அவரை நோக்கி கேள்விக் கணைகள் சீறிப் பாயத் தொடங்கின. இவ்வாறு

**றொல்பேர்ற் அவர்களோ விடவில்லை. 'தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதை மட்டும் தான் உங்களால் நிரூபிக்க முடியும். தமிழினத்தை அழிக்கும் நோக்கத்தோடு தான் இந்தப் படுகொலைகள் அரங்கேற்றப்பட்டன என்பதை உங்களால் நிரூபிக்க முடியுமா? அதற்கெல்லாம் எழுத்து ரீதியிலான ஆதாரங்கள் தேவை. அப்படியான ஆவணங்கள் உங்களிடம் உள்ளனவா?'**

கேள்விக் கணைகளைத் தொடுத்தவர்களில் முதன்மையானவர்கள் பெண்கள். ஒருவர் கனடாவில் பிறந்து தற்பொழுது பிரித்தானியாவில் வசிக்கும் சட்டத்தரணி. மற்றையவர் தமிழீழத்தில் பிறந்திருந்தாலும், சிறு வயதில் தாயகத்தை விட்டு ஆபிரிக்க நாடொன்றுக்குப் புலம்பெயர்ந்து, பின்னர் அங்கிருந்து பிரித்தானியாவிற்கு நிரந்தரமாகக் குடிபெயர்ந்த ஒரு முதலீட்டாளர். தமிழின அழிப்பிற்கு நீதிகோரி இருபது ஆண்டுகளுக்கு மேலாக செயற்படுபவர்.

'தமிழர்களுக்கு இழைக்கப்பட்டது இனவழிப்பு இல்லை என்று நீங்கள் எந்த அடிப்படையில் கூறுகின்றீர்கள்? எமது

அரங்கேற்றப்பட்டன என்பதை உங்களால் நிரூபிக்க முடியுமா? அதற்கெல்லாம் எழுத்து ரீதியிலான ஆதாரங்கள் தேவை. அப்படியான ஆவணங்கள் உங்களிடம் உள்ளனவா?' என்று குறித்த செயற்பாட்டாளரை அவர் மடக்க முற்பட்டார்.

உடனே அவ்விடத்திலிருந்த கனடியப் பின்புலத்தைக் கொண்ட பெண் சட்டத்தரணி சீறிப் பாய்ந்தவாறு கூறினார்: 'இனத்தை அழிக்கும் நோக்கத்துடன் தான் படுகொலைகள் நிகழ்ந்தன என்பதை நிரூபிப்பதற்கு எழுத்து ரீதியிலான ஆதாரங்கள் மட்டும் தான் தேவை என்ற விதி இனவழிப்பு தொடர்பான சர்வதேச சட்டத்தில் இல்லை. இப் படுகொலைகளை நிகழ்த்தியவர்கள் அல்லது அவர்களுக்கு உடந்தையாக இருந்தவர்கள் வழங்கக் கூடிய வாக்குமூலங்களையும் இனவழிப்பிற்கான நோக்கத்தை நிரூபிப்பதற்கான ஆதாரங்களாகக் கொள்ளலாம். றுவாண்டாவில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் பற்றிய பன்னாட்டுத் தீர்ப்பாய விசாரணைகளில் இவ்வாறான வாக்குமூலங்கள் தான் ஆதாரமாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. எனவே உங்கள் கருத்தை ஏற்க முடியாது.'

ஆனால் டேவிட் றொல்பேர்ற் அவர்களோ மசியவில்லை. 'தமிழினத்தை அழிக்கும் நோக்கத்துடன் தான் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதை நிரூபிப்பதற்கான வாக்குமூலங்கள் ஏதாவது அப் படுகொலைகளை அரங்கேற்றியவர்களால் வழங்கப்பட்டனவா? அவ்வாறான வாக்குமூலங்கள் உங்களிடம் இருக்கின்றனவா?' என்று பதில் கேள்வி கேட்டு குறித்த கனடியப் பெண் தமிழ் சட்டத்தரணியை அவர் மடக்கினார்.

உடனே அவ்விடத்தில் குறுக்கிட்ட பிரித்தானியாவிலிருந்து வந்திருந்த தமிழ் அமைப்பொன்றின் பிரதிநிதி, 'இறுதி யுத்தத்தில் வன்னியில் 70,000 தமிழர்கள் தான் வசிக்கின்றார்கள் என்று கூறி அங்கிருந்த மக்களுக்குத் தேவையான உணவையும், மருந்தையும் அனுப்புவதற்கு சிறீலங்கா அரசாங்கம் மறுத்தது: மக்கள் மீது தாக்குதல்களைத் தொடுத்தது. ஆனால் யுத்தம் முடிவடைந்ததும் வன்னியில் இருந்து மொத்தம் மூன்று இலட்சம் தமிழர்கள் வெளியில் வந்தார்கள். தமிழினத்தை அழிக்கும் நோக்கத்துடன் தான் இவ்வாறு சிறீலங்கா அரசாங்கம் பொய்களைக் கூறியது. எனவே இனவழிப்பை நிரூபிப்பதற்கு இந்த ஒரு ஆதாரமே போதும் தானே?'

இவ்வாறு குறித்த பிரதிநிதி கேள்வியெழுப்பிய பொழுது, அதை அங்கிருந்த ஏனைய புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆமோதித்தார்கள்.

தொடர்ச்சி 18ம் பக்கம்

# பிரான்சில் பேரெழுச்சிகொண்டிருந்த மாவீரர் நாள் –2019 நினைவேந்தல் நிகழ்வு!









பந்தன் கல்லறை வணக்க நிகழ்வு...



பந்தன் கல்லறை வணக்க நிகழ்வு...



Lyon நகரில்...



நெவர் நகரில்...



Reunion தீவில்...



ஸ்ராஸ்பூர்க் நகரில்...



இந்தோனேசியா – ஜகர்த்தாவில்...


## நொய்சி சாம் தமிழ்ச்சோலையின்

## 15 வது ஆண்டு நிறைவு விழா

## 15ème ANNIVERSAIRE DU ASSOCIATION DES TAMOULS DE NOISY CHAMPS - 93

நொய்சி சாம் தமிழ்ச்சோலை மாணவர்களின் பல்சுவை கலை நிகழ்வுகளை கண்டுகளித்திட உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

காலம்: **15.12.2019**

ஞாயிற்றுக்கிழமை **11.00** மணி

இடம்: **«River» 11, Boulevard Georges Méliés 94350 Villiers-sur-Marne**


ASSOCIATION DES TAMOULS DE NOISY CHAMPS - 93
6, Allée de la Collin - 93160 Noisy-le-Grand.
Tél: 06.95.39.95.72 / 06.65.94.59.22 / 06.24.95.16.07






## SEREE MAHAL

ARTICLES DE CADEAUX, BRICOLAGE



வீட்டு விழாக்களுக்குத் தேவையான தரமான அன்பளிப்புப் பொருட்கள் மலிவு விலையில்!

100% எலி, பூச்சி கொல்லி மருந்துகள் எம்மிடம் கிடைக்கும்!

14, rue Cail, 75010 Paris

Tel: 06 69 58 61 61
09 51 15 82 03

M La Chapelle ou Gare du Nord

# தமிழீழத்தில் எழுச்சியுடன்...
# மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தப்பட்டது!


பருத்தித்துறையில் கரும்புலி கப்டன் மில்லரின் தாயார்...


கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில்...


கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில்...


கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில்...


மட்டக்களப்பு மாவடி முன்மாதிரி துயிலும் இல்லத்தில்...


விஸ்வமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தில்...


முல்லைத்தீவு இரட்டைவாய்க்காலில்...


முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில்...


யாழ் தீவகத்தின் சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில்...


யாழ் பல்கலையில்...


கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில்...


வடமராட்சி தீருவில் மாவீரர் துயிலும் இல்லம் ...

பொருள் யுத்தமதாகப் பல்லாண்டு காலம் ஈரான் ஈராக் யுத்தம் நடந்து வந்து, அமெரிக்கப் பிரெஞ்சு நடுநிலைமையோடு முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது.

தற்போது மீண்டும் ஒரு எரிபொருள் யுத்தம் ஈரானிற்குள்ளேயே வெடித்துள்ளது. இம்முறை ஈரான் இஸ்லாமிய அரசிற்கு எதிராக, ஈரானிய மக்களே போராட்டத்திலும், புரட்சியிலும் இறங்கியுள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் ஈரானிய அரசு, வாகன எரிபொருள் விலையை இருநூறு சதவீதத்தால் ஒரே இரவில் அதிகரித்தது. இது மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. மக்கள் பேராட்டக் களத்தில் இறங்கினார்கள்.

சோழகரிகாலன்



# ஈரான் : மக்கள் படுகொலை

# மீண்டும் ஓர் எரிபொருள் யுத்தம்!

உடனடியாக தனது சொந்த மக்களையே தனது இரும்புக் கரம் கொண்டு அடக்க நினைத்த, தன்னை அதிஉயர் சர்வ அதிகாரத் தலைவராக எண்ணிக்கொள்ளும் அலி கமேனி (Ali Khamenei), தனது சொந்த மக்கள் மீது இராணுவத்தையும் காவற்துறையினரையும் ஏவி விட ஆரம்பித்தார். அயத்துல்லா கொமேனியின் பிறகு, ஈரானின் நீண்டகால அதிபராக அலி கமேனி ஈரானைத் தன்பிடிக்குள் வைத்துள்ளார்.

உலகத்தின் இனவாத, சர்வாதிகார அரசுகளின் பாணியில்,போராட்டத்தில் இறங்கிய மக்கள் மீது, ஈரானிய காவற்துறையினர் துப்பாக்கிப்பிரயேகம் செய்ய ஆரம்பித்தனர். உயிரிழந்தவர்களின் உடலங்களைக் கூட, பிணவறையில் இருந்து கைப்பற்றி, அழிக்கத் தொடங்கியது. காயமடைந்தவர்களைக் கூட மிக இரகசியமாகக் கடத்திச்சென்று அவர்களையும் அழிக்கத்தொடங்குவதன் மூலம், மக்களை அச்சுறுத்த ஈரானிய அரசாங்கம் ஆரம்பித்தது.

எரிபொருள் விலையேற்றத்திற்காக ஆரம்பித்த மக்கள் போராட்டம், மக்கள் மீதான அடக்குமுறைகளின் பின்னர், அலி கமேனியின் அரசை அகற்றும் புரட்சிப் போராட்டமாக உருவெடுத்துள்ளது.

இந்தப் படுகொலைகளையும், மக்கள் மீதான அடக்குமுறைகளையும், அச்சத்தையும், கட்டவிழ்த்து விட்ட ஈரானிய அரசாங்கம், அடுத்தகட்டமாக மக்களைத் தனிமைப்படுத்தும் மிகவும் மோசமான காரியத்தைச் செய்ய ஆரம்பித்தது.

தற்கால உலகில் மக்கள் போராட்டங்கள் முளைவிடுவதற்கும், அது பெரும் புரட்சியாக வளர்வதற்கும், சமூகவலைத் தளங்களும், இணையத் தொடர்பும், இன்றியமையாத ஒரு ஆயுதமாக மாறிவிட்டது. துனிசியாவின் மல்லிகைப் புரட்சி வெற்றியடைவதற்குச் சமூகத்தளங்கள் ஆற்றிய பங்கு மறுக்கமுடியாத ஒன்று.

> ஒரு வல்லரசின் கடும்போக்கும், ஒரு இஸ்லாமிய அரசின் படுகொலைகளும், போராடும் மக்களின் குரல்வளைகளை நசுக்குவதோடு, சாட்சிகளற்ற படுகொலைக்களத்தில் சத்தமின்றிப் படுகொலை செய்யப்படவும் வைத்துள்ளது.



இந்த ஆயுதத்தை, ஈரானியமக்களும் கையில் எடுக்க ஆரம்பித்தனர். ஈரானிய அரசின், அடக்குமுறைகளும், பாரிய கைதுகளும், வெளியுலகத்திற்குப் பரவவும், புலம்பெயர்ந்த ஈரானியமக்கள் இதற்கெதிரான பிரச்சாரங்களையும் ஆரம்பிக்கவும், ஈரானின் அனைத்து இணையம் மற்றும் தொலைத்தொடர்புகளை இஸ்லாமிய ஈரான் அரசு, துண்டித்தது.

இந்த நடவடிக்கை, சர்வதேச அரங்கில் ஈரானிற்கு எதிரான கண்டனங்களை எதிரொலிக்க வைத்துள்ளது.

ஈரானின் மீதான, நடவடிக்கைக்காகக் காத்திருந்த அமெரிக்க அரசு, ஈரான் அரசின் அடக்குமுறைகளை வெளியுலகிற்குக் கொண்டுவரும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

'ஈரானிய மக்கள் மீதான கடுமையான நடவடிக்கையை ஈரான் நிறுத்தவேண்டும். மக்கள் மீதான நடவடிக்கைகள் பலத்த உயிரச்சேதத்தை ஏற்படுத்தி உள்ளது. மக்களின் குரல்வளைகள் நசுக்கப்படுகின்றன. உடனடியாக இணையசேவையை ஈரானிய அரசு மீண்டும் இயங்குநிலைக்குக் கொண்டுவரவேண்டும்' என அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ எச்சரித்தள்ளார்.

பெஹபகான், கராஜ், மரிவான், ஸரிகார், ஸிராஜ், சிறீஜான், மற்றும் தெஹ்ரானில் நடந்த போராட்டங்களில், மக்களின் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடந்தில், வீதியெங்கும் உடலங்கள் நிறைந்து கிடக்கும் காணொளி, இணையுத்தள முடக்கலையும் மிறி வெளிவந்துள்ளது. தன் பின்னணியில் அமெரிக்கா இயங்குவதாக றரான் வெளிப்படையாகக் குற்றம் சாட்டி உள்ளது.

இருப்பினும் ஒரு நாள் போராட்டத்தில் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதாக, அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் ஈரானியப் புலம்பெயர் அமைப்புகள் ஆதாரத்துடன் வெளியிட, அமெரிக்க அரசு அதனை உறுதிப்படுத்தி உள்ளது.

டொனால்ட ட்ரம்பின் அரசு, ஈரான் அணுவாயுத ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்தவில்லை என்று காரணம் காட்டி, திடீரெனக் கடந்த மாதம் பொருளாதாரத் தடையை ஈரான் மீது நடைமுறைப் படுத்தியது.

அமெரிக்காவின் பொருளாதாரப் பயங்கரவாதத்தினால் தான் ஈரானிய மக்கள் மிகவும் துன்த்திற்கு உள்ளாகிய உள்ளனர் என ஈரான் அமெரிக்காவிற்குப் பதிலடி கொடுத்தாலும், 'ஈரானின் சர்வாதிகாரி கொல்லப்படவேண்டும்' எனற மக்கள் முழக்கம், ஈரானை அதிரச் செய்ய ஆரம்பித்துள்ளது.

ஈரானின் மிகவும் பலம் வாய்ந்த இஸ்லாமிய புரட்சிகரக் காவற்படையினர் (IRGC),அரசிற்கிற்கு எதிரான பொதுமக்களின் போராட்டங்களை நசுக்குவதிலும், ரகசியப் படுகொலைகளிலும், மக்கள் மீதான துப்பாக்கிச் சூட்டிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த வாரத்தில் மட்டும், ஏழாயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களின மீதான சித்திரவதைகள் நடப்பதாகச் சர்வதேச மன்னிப்புச் சபை தனது கண்டனத்தை வெளிப்படுத்தி உள்ளது.

அமெரிக்காவைத் தொடர்ந்து, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி, ஈரான் அரசின் படுகொலைகளைக் கண்டித்துள்ளன.

டொனால்ட ட்ரம்பின் எதேச்சைத்தனமான, சர்வாதிகாரப் போக்கும், ஈரான் மீதான திடீர்ப் பொருளாதாரத் தடையும், ஈரானின் மக்கள் மீதான திடீர் விலையேற்றங்களும், ஈரானிய மக்களின் வாழ்வாதாரத்தை நசுக்கியதுடன், அவர்களின் உயிர்களையும் பறித்துள்ளது.

ஒரு வல்லரசின் கடும்போக்கும், ஒரு இஸ்லாமிய அரசின் படுகொலைகளும், போராடும் மக்களின் குரல்வளைகளை நசுக்குவதோடு, சாட்சிகளற்ற படுகொலைக் களத்தில் சத்தமின்றிப் படுகொலை செய்யப்படவும் வைத்துள்ளது. எரிபொருள் யுத்தம் பிணக்குவியல்களின் மீது தொடர்ந்த வண்ணமே உள்ளது.

# நீண்ட பல்லுக்காரன் சிரித்தாலும், அழுதாலும் ஒன்று தான்




வணக்கம் பிள்ளையள்.

என்னடா கிழவன் முப்பத்திரண்டு பல்லையும் காட்டிக் கொண்டு வருகுது என்று நீங்கள் தலையைச் சொறியிறது எனக்கு விளங்குது.

அதுவும் உங்கடை பிரச்சினை நான் பல்லைக் காட்டிக் கொண்டு வருகிறன் என்பதை விட, எனக்கு இந்த வயதிலும் ஒரு பல்லும் விழாமல் இருக்குது என்பது தான் என்று எனக்குத் தெரியும்.

உதிலை ஒரு இரகசியமும் இல்லை பிள்ளையள். எல்லாம் புத்தம் புதுசாகக் கட்டின பொய்ப் பல்லுகள் தான். அது தான் முப்பத்திரண்டு பல்லையும் காட்டிக் கொண்டு வருகிறன்.

சமமாய் கலந்து ஊதி ஊதி நாங்கள் சாப்பிடலாம் என்கிற மாதிரி அறளை பெயர்ந்து போய் சம்பந்தர் ஏதோ உளற, அதை ஒரு கதையென்று அவரின்ரை அல்லக்கைகள் சிலதுகள் ஊரெல்லாம் பரப்பிக் கொண்டு திரியிதுகள்.

அது தான் சிரிப்பை அடக்க முடியாமல் முப்பத்திரண்டு பல்லையும் காட்டிக் கொண்டு வந்தனான் பிள்ளையள்.

உந்த இந்திய - இலங்கை ஒப்பந்தம் எப்ப கைச்சாத்தாகியது பிள்ளையள்? ஒப்பந்தம் கைச்சாத்தாகி முப்பத்திரண்டு வருசம் ஆச்சுது. இந்த முப்பத்திரண்டு வருசத்திலை ஏதாவது உருப்படியாக நடந்திருக்குதே? அல்லது உந்த ஒப்பந்தத்தை சிங்களவன் அமுல்படுத்தவில்லை என்பதற்காக




பின்னை என்ன? பொக்கை வாயோடு நான் கதைச்சால் உங்களுக்கு ஏதாவது விளங்குமே?

சரி விசயத்துக்கு வாறன்.

இப்ப கொஞ்ச நாளைக்கு முதல் டில்லிக்குப் போன எங்கடை கோத்தபாய மாத்தையாவிட்டை தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கத்தைக் கொடுக்கச் சொல்லி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கேட்டவராம்.

அதுவும் சும்மா இல்லை பிள்ளையள். எங்கடை கூத்தமைப்புக்காரரின்ரை வார்த்தைகளில் சொல்லிறது என்றால் வலியுறுத்திக் கேட்டவராம்.

அதுக்குக் கோத்தபாய சொன்னவராம், 'உதெல்லாம் சரி வராது. உதுக்குச் சிங்களச் சனம் ஒருக்காலும் இணங்காது. வேணும் என்றால் தமிழ் மக்களுக்கு வேலை போட்டுக் கொடுக்கிறதுக்கு அடுக்குப் பார்க்கிறேன்' என்று.

ஆனாலும் மோடியார் விடவில்லை. சந்திப்பு முடிஞ்சதும் செய்தியாளர்களைச் சந்திக்கும் பொழுது, உதே பல்லவியைப் பாடியிருக்கிறார். அந்த இடத்தில் எதுவும் பேசாமல் பெட்டிப் பாம்பாக இருந்த கோத்தபாய மாத்தையா, பிறகு இந்திய ஊடகம் ஒன்றுக்குப் பேட்டி கொடுக்கும் போது சொன்னவராம், 'தமிழ் மக்களுக்கு நான் அதிகாரப் பரவலாக்கமும் கொடுக்கப் போகிறதில்லை, பொலிஸ் அதிகாரமும் கொடுக்கப் போகிறதில்லை. அபிவிருத்தி மட்டும் தான் கொடுப்பேன்' என்று.

உதைக் கேள்விப்பட்டதும் எங்கடை கூத்தமைப்புக்காரர் கொஞ்சப் பேர் குழம்பிப் போய் அவசரமாக கிழட்டுச் சம்பந்தரிட்டை விளக்கம் கேட்டிருக்கினம்.

அதுக்கு சம்பந்தர் சொன்னவராம், 'கோத்தபாய அப்படித் தான் சொல்லுவார், ஆனால் இந்தியா சும்மா இருக்கப் போவதில்லை. 13ஆவது திருத்தச் சட்டம் என்பது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. அதைக் கோத்தபாய மீறினால் இந்தியா சும்மா இருக்காது என்கிற படியால் நீங்கள் யாரும் யோசிக்க வேண்டாம்' என்று.

நீ அரிசி கொண்டு வா, நான் உமி கொண்டு வாறன், இந்தியாதான் ஏதாவது செய்ததோ?

ஒப்பந்தம் கைச்சாத்தாகும் போது சம்பந்தருக்கு ஐம்பத்தி நாலு வயது. இப்ப கிழவனுக்கு எண்பத்தாறு வயது கடந்திட்டுது பாருங்கோ.

கிழட்டுச் சம்பந்தர் கருணாநிதியின் வயதுக்கு வந்தாலும் எதுவுமே நடக்கப் போவதில்லை பிள்ளையள். நானும் இருந்து பார்க்கத் தானே போகிறேன்.

பட்டும் பட்டாடையும் பெட்டியில் இருக்கும், காற்காசு கந்தையில் ஒடி உலாவும் என்கிற கதையாக பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தில் உள்ள காணி அதிகாரமும், பொலிஸ் அதிகாரமும் அமுல்படுத்தப்படாமல் இருக்க, மாகாண சபைகள் மட்டும் உப்புச் சப்பில்லாமல் வெற்று வேட்டுகள் போல் கடந்த முப்பத்திரண்டு வருசங்களாக இயங்கிக் கொண்டிருக்குது.

**அந்த நாளிலேயே எங்கடை தம்பி பிரபாகரன் சொன்னவர், உந்த மாகாண சபைகளால் தமிழர்களுக்கு எந்தப் பிரயோசனமும் இல்லை என்று. அப்ப தம்பிக்கு வயது முப்பத்தி மூன்று. உதைக் கேட்டுப் போட்டு பருத்திக்கு உழும் முன் தம்பிக்கு எட்டு முழம் என்கிற கதையாக அப்பாப்பிள்ளையின்ரை மகன் அமிர்தலிங்கத்தார் சொன்னவராம், 'தம்பி பிரபாகரனுக்கு மாகாண சபைகளின்ரை தார்ப்பரியம் விளங்கவில்லை. உந்த மாகாண சபைகளுக்குள் தான் தமிழருக்கு விடிவே இருக்குது' என்று.**

அந்த நாளிலேயே எங்கடை தம்பி பிரபாகரன் சொன்னவர், உந்த மாகாண சபைகளால் தமிழர்களுக்கு எந்தப் பிரயோசனமும் இல்லை என்று.

அப்ப தம்பிக்கு வயது முப்பத்தி மூன்று. உதைக் கேட்டுப் போட்டு பருத்திக்கு உழும் முன் தம்பிக்கு எட்டு முழம் என்கிற கதையாக அப்பாப்பிள்ளையின்ரை மகன் அமிர்தலிங்கத்தார் சொன்னவராம், 'தம்பி பிரபாகரனுக்கு மாகாண சபைகளின்ரை தார்ப்பரியம் விளங்கவில்லை. உந்த மாகாண சபைகளுக்குள் தான் தமிழருக்கு விடிவே இருக்குது' என்று.

இப்ப நீங்கள் சொல்லுங்கோ பிள்ளையள், ஆருக்கு மாகாண சபைகளின்ரை தார்ப்பரியம் விளங்கவில்லை என்று. தம்பி பிரபாகரன் ஒரு தீர்க்கதரிசி பிள்ளையள். அதாலை தான் இன்றைக்கு ஒவ்வொரு தமிழர்களின் இதயங்களிலும் நிரந்தரமாகத் தேசியத் தலைவர் என்ற சிம்மாசனத்தில் அவர் அமர்ந்திருக்கிறார்.

இன்றைக்குப் பத்து வருசமாச்சுது தம்பியின்ரை குரலை நாங்கள் கேட்டு. ஆனாலும் எங்கடை விடுதலை உணர்வு என்ன மங்கியே போச்சுது? தம்பி பிரபாகரன் மூட்டின தீ இந்த முறையும் மாவீரர் நாளில் கொழுந்து விட்டெரிஞ்சதை முழு உலகமும் பார்த்தது தானே பிள்ளையள்.

எது எப்படியோ, சிங்களவன் எங்களுக்கு எந்தக் காலத்திலையும் எதையுமே தரப் போகிறதில்லை.

நீண்ட பல்லுக்காரன் அழுதாலும், சிரித்தாலும் ஒன்று தான் என்கிற கதையாக சிங்களவன் சமஸ்டி தருவதாகச் சொன்னாலும் சரி, அதிகாரப் பரவலாக்கம் தர மாட்டேன் என்று சொன்னாலும் சரி, எல்லாம் எங்களுக்கு ஒன்று தான் பிள்ளையள்.

உதுக்குள்ளை தமிழ் மக்களுக்கு கோத்தபாய அபிவிருத்தி கொடுக்கப் போகிறாராம். எங்களை என்ன இளிச்சவாயனுகள் என்றே சிங்களவன் நினைச்சுக் கொண்டு இருக்கிறான்? பசுவின் மடியை அறுத்துப் போட்டுப் புண்ணாக்கு வாங்கக் காசு கொடுத்த கதையாகத் தான் அவரின்ரை அபிவிருத்திக் கதை இருக்குது. ஒன்றரை இலட்சம் தமிழர்களை அவர் ஈவிரக்கமின்றிக் கொல்லுவாராம், பிறகு தமிழருக்கு அபிவிருத்தியும் வேலை வாய்ப்பும் தருவாராம்.

இந்த இடத்தில் எனக்கு ஒரு தடவை இலண்டனில் நடந்த மாவீரர் நாளில் தம்பி பாலா, அது தான் எங்கடை அன்ரன் பாலசிங்கம், சொன்னது தான் ஞாபகத்துக்கு வருகுது.

சிங்களவனுக்கு ஒரேயொரு பாசை தான் விளங்கும். அடி தான் அது என்று அப்பவே தம்பி பாலா தெளிவாகச் சொன்னவர்.

ஏதோ, விளங்கிறவையள் விளங்கிக் கொண்டால் சரி.

இந்தக் கிழமை தம்பி பாலாவின்ரை நினைவு நாள் வருகுது. சும்மா வருசா வருசம் அவரின்ரை படத்துக்கு கற்பூரம் கொளுத்தி ஆராதனை செய்து, மலர் மாலை அணிவிச்சு, நாலு வீர வசனம் பேசுகிறதோடு நிற்காமல், தம்பி பாலாவின்ரையும், எங்களுக்காக தங்கடை இளைய உயிர்களை அர்ப்பணிச்ச ஆயிரமாயிரம் மாவீரர்களின்ரையும் கனவையும் நனவாக்குவதற்கு ஆக்கபூர்வமான முயற்சிகளை இந்த முறையாவது எங்கடை ஆட்கள் எடுத்தால் சரி.

தம்பி பாலா திரும்பத் திரும்பச் சொல்கிறவர்: பலத்தில் இருந்து தான் அரசியல் பேசலாம் என்று. இல்லை என்றால் பூனை இளைத்தால் எலி கூட மச்சான் முறை கொண்டாடும் பாருங்கோ. ஏற்கனவே அது தான் நடக்குது.

வேறை என்ன பிள்ளையள்? அப்ப நான் போய் விட்டு வரட்டே?




# குழந்தையைப் பார்த்துக் கொள்வதில் அதன் தாயை விட சிறந்தவர் ஒருவரும் இருக்கமுடியாது. பிள்ளையைப் பார்த்துக் கொள்வதில் தாயை விட தந்தை உயர்ந்தவாரா?

**கேள்வி:–** இந்த உலகில் ஒரு குழந்தையைப் பார்த்துக் கொள்வதில் அதன் தாயை விட சிறந்தவர் ஒருவரும் இருக்கமுடியாது என்கிறேன் நான். ஆனால், என் கணவர் அதனை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார். பிள்ளையைப் பார்த்துக் கொள்வதில் தாயை விட தந்தை உயர்ந்தவாரா என்ன?

மதுபாலன் நாகராணி பிரான்ஸ்

**பதில்:–** தாய், தந்தையை விட சில வேளைகளில் வேலைக்காரர்கள் கூட உயர்ந்தவர்களாகி விடுகின்றார்களே..! கடந்த ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு சவுதி அரேபியாவில் நடந்த உண்மைச் சம்பவம் இது.

சவுதி அரேபியாவில் பல நிறுவனங்களுக்கு சொந்தக்காரரான ஒரு கோடீஸ்வரருக்கு திருமணம் முடிந்து 20 வருடங்கள் கழித்து ஒரெயொரு ஆண் குழந்தை பிறந்தது. தங்கள் சொத்துக்கும் வாரிசு இல்லாமல் போய்விடுமோ என்ற கவலையில் இருந்த அந்த குடும்பத்திற்கு பொக்கிசமாக வந்தது அந்த குழந்தை.

அந்த வீட்டில் வேலை செய்து வந்தவர் ஓர் இலங்கைத் தமிழ்ப் பெண். அவருக்கு இலங்கையில் 3 குழந்தைகள். கணவர் சிறு வியாபாரம் செய்து வந்ததால் வருமானம் போதாமல் தன் குழந்தைகளை வளர்ப்பதற்காக இந்தத் தாய் சவுதிக்கு வேலைக்கு வந்திருந்தார். சவுதியின் கோடீஸ்வரித் தாய்க்கு குழந்தைக்கு தாய்ப் பால் கொடுப்பது மட்டும்தான் வேலை. இந்த இலங்கைப் பெண்ணிடம்தான் அந்தக் குழந்தையைப் பராமரிக்கும் முழுப் பொறுப்பும் கொடுக்கப் பட்டிருந்தது. ஒரு கட்டத்தில் இரவில் தூங்கக் கூட குழந்தை பெற்றோரிடம் செல்ல மறுத்தது. தூங்கிய பின்பு, தூக்கிக்கொண்டு தங்களின் அறைக்கு அவர்கள் செல்லுவார்கள்.



குழந்தையைப் பரமரிப்பதால், வீட்டுவேலை செய்யும் அந்த பெண் விடுமுறைக்கு ஊர் செல்ல பலமுறை அனுமதி கேட்டும் அவர்களால் வழங்கமுடியவில்லை. குழந்தைக்கு 2 வயதாகிவிட்டது. மிகுந்த போராட்டத்திற்குப் பின்பு 3 மாதம் விடுமுறையில் அப்பெண் இலங்கை சென்றார். அவர் இலங்கை புறப்பட்ட அடுத்த நிமிடத்தில் இருந்து அழ ஆரம்பித்து விட்டது அந்தக் குழந்தை. சிறிது நேரத்தில் சரியாகிவிடும் என்று அந்தக் கோடீஸ்வரப் பெற்றோர்களும் இருந்து விட்டார்கள். இரவு உணவு உண்ணவில்லை. ஒரே அழுகை. அழுது அழுது துவண்டு தூங்கி விட்டது. அப்படியே தூங்கட்டும். காலையில் விழித்ததும் பசிக்கும், சாப்பிடும். என்று விட்டு விட்டார்கள். காலையில் விழித்ததும் ஈனக்குரலில் அழ ஆரம்பித்து விட்டது. உணவும் உண்ணவில்லை. சில மணித்துளியில் மயங்கி விழுந்து விட்டது. பயந்து போன பெற்றோர்கள் மருத்துவமனைக்கு கொண்டோடினார்கள்.

மூன்று நாட்களாக மருத்துவமனையில் இருந்தும் குழந்தை இதுவரை கண் திறந்து பார்க்கவில்லை. குழந்தையை எப்படிக் காப்பாற்றுவது என்று மருத்துவர்களுக்குப் புரியவில்லை. மருத்துவர்கள் கையை விரித்து விட்டார்கள். ஒரே மருந்து... அந்த வேலைக்கார பெண் உடனடியாக அங்கு வருவதுதான் என்றும், இல்லை என்றால் இப்படியே கோமாவில் தான் குழந்தை இருக்கும் மருத்துவர்களும் சொல்லிவிட்டார்கள். அந்தக் கோடீஸ்வரர் இலங்கை சென்ற அந்தப் பெண்ணைத் தொடர்பு கொள்ள எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. இறுதியில் அந்தப் பெண்ணைக் கொண்டுவந்து தங்களிடம் சேர்த்துவிட்டவரைக் கண்டுபிடித்து, எப்படியாவது அந்தப் பெண்ணுடன் தொடர்பெடுத்துத் தாருங்கள் என்று கோடீஸ்வரர் அவரிடம் கண்ணீர் விட்டு அழுதுள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த அந்த நபர் பின்னர் நடந்ததை சொல்வதைக் கேளுங்கள்...

“குழந்தையின் நிலைமையால் அவர்களின் ஒட்டுமொத்த குடும்பமும் உருக்குலைந்து இருந்தது. இந்த இலங்கைப் பெண்மணி, என் நிறுவனத்திற்கு அடுத்து இருக்கும் ஒரு வேலைக்கு ஆட்கள் எடுக்கும் நிறுவனம் மூலம் வந்தவர். முதல் நாள் அவளை அழைத்து செல்ல வந்த சவுதி நபர், அவள் பேசும் தமிழ் புரியாமல், என்னிடம் அனுப்பி வைக்கப்பட்டார். அதை நினைவில் வைத்துக்கொண்டு, என் ஊராக இருக்கும் என்று என்னிடம் வந்தார். விபரங்கள் கூறினார். குழந்தை போல அழுதார். ஒரு பெரும் கோடீஸ்வரர், பல நிறுவனங்களுக்கு அதிபதி, குறைந்தது 15 ஆயிரம் நபர்களாவது இவரிடம் பணி புரிகிறார்கள். கூடவே மன்னர் குடும்பத்தில் பெண் எடுத்தவர். விபரம் சொன்னார். நான் அவரிடம், தமிழ் மொழி பல நாடுகளில் பேசுகிறார்கள். நான் இந்தியா, அவள் சிறீலங்கா என்று விவரித்துக்கொண்டு இருக்கும்போது, மூளையில் ஒரு மின்னல் வெட்டியது. அந்தப் பெண்மணி கூறிய அவளுடைய ஊரும், எனக்கு பழக்கமான ஒரு சிறீலங்கா சாரதியின் ஊரும் ஒன்று. அடுத்தடுத்த தெரு. அவரை பிடித்தேன், அவரின் மனைவிக்கு தொலைபேசி எடுத்து, அடுத்த தெருவில் இருந்த வேலைக்காரப் பெண்ணை தொடர்பு எல்லைக்குள் கொண்டு வந்து, சவுதி கோடீஸ்வரரிடம் பேச வைத்து விட்டேன். ஒரு 40 நிமிடத்தில் அனைத்தும் முடிந்து விட்டது.

ஆனால் அந்த வேலைக்கார பெண்மணியோ, நான் வந்து 4 நாட்கள் தான் ஆகிறது, கணவனுக்கு நோய் வந்து மருத்துவமனையில் இருக்கின்றார். நான் எப்படி வர இயலும் என்று தன்னுடைய இயலாமையை கூற, சவுதிக் கோடீஸ்வரர் என்னிடம் பேச சொல்ல, நான் இந்த குழந்தையின் நிலைமையை சொல்ல, அவள் அழுக, அவளின் சூழ்நிலையை சொல்ல. அனைத்தையும் சவுதியிடம் கூறினேன். அவரோ தேம்பி தேம்பி அழுது கொண்டு, என் சொத்து அனைத்தும் போனாலும் பரவாயில்லை. எனக்கு என் குழந்தை வேண்டும் என்று கூறினார். சரி, அவளுடைய குடும்பத்திற்கு விசா ஏற்பாடு பண்ணுங்க என்று கூறி, அவளிடம் அனுமதியும் வாங்கி விட்டேன்.

தொடர்ச்சி 18ம் பக்கம்

**கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**
இலத்திரனியல் முகவரி : eelamurazu@gmail.com
தபால் முகவரி : Media Centre, BP 40, 93141 Bondy pdc
குறுந்தகவலாக (கைபேசி SMS) : 00 33 7 81 80 81 16


## வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

# வர்த்தகப் போர், அரசியல் மாற்றங்கள் பலவீனமடையும் உலகப் பொருளாதாரம்!

நாடுகளுக்கிடையேயான வர்த்தகப் போர் அரசியல் மாற்றங்கள் காரணமாக உலகப் பொருளாதார நிலை 2020ம் ஆண்டிலும் பலவீனமாகவே இருக்கும் என்று பொருளாதார ஆய்வு நிறுவனம் மூடிஸ் தெரிவித்துள்ளது. விளைவாக உலகளாவிய கடன் நிலைமைகள் மேலும் பாதிப்பை சந்திக்கும் என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

2008–2009 காலகட்டத்தில் உலகப் பொருளாதாரம் மிக மோசமான நெருக்கடிக்கு உள்ளாகியது. இதனால் பல வளர்ந்த நாடுகளும் கடுமையான பாதிப்பை சந்தித்தன. தற்போது காணப்படும் பொருளாதார மந்தநிலை அதுபோலான பெரும் நெருக்கடிக்கு இட்டுச் செல்லும் என்று கூறப்பட்டு வந்தது. இந்நிலையில் 2009ம் ஆண்டு ஏற்பட்ட பெரிய அளவிலான பொருளாதாரப் பின்னடைவுபோல் 2020ம் ஆண்டு ஏற்பட வாய்ப்பு இல்லை என்றாலும் கடந்த பத்து ஆண்டுகளில் நடப்பு ஆண்டில்தான் பொருளாதார வளர்ச்சி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை அடுத்த ஆண்டும் தொடரும் என்று மூடிஸ் கூறியுள்ளது.



நாடுகளுக்கிடையேயான வர்த்தகப் போர், அரசியல் மாற்றங்கள், புவி–அரசியல் சூழ்நிலை போன்றவற்றின் காரணமாக பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. குறிப்பாக அமெரிக்கா – சீனா இடையேயான வர்த்தகப் போர், பிரித்தானியாவின் பிரக்ஸிட் போன்றவை தற்போதைய மந்தநிலைக்கு மிக முக்கிய காரணிகளாக உள்ளன. இவற்றின் விளைவால் 2020ம் ஆண்டும் உலகப் பொருளாதார நிலை மந்தமாக இருக்கும் என்று மூடிஸ் சுட்டிக்காட்டி உள்ளது. இந்தப் போக்கு உலகளாவிய கடன் நிலைமைகளை பாதிக்கும் என்று கூறியுள்ளது. அதேபோல் வட்டி விகித அளவு குறைவாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளது. குறைந்த வட்டி விகிதம் நிறுவனங்களுக்கு சாதகமானது என்றாலும் அது வங்கிகளைப் பாதிக்கும் என்று சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த ஆண்டு அமெரிக்கா–சீனா இடையே வர்த்தகப் போர் தொடங்கியது. அமெரிக்கப் பொருட்களுக்கு சீனாவும், சீனப் பொருட்களுக்கு அமெரிக்காவும் மாறி மாறி வரி விகிதத்தை உயர்த்தின. இதனால் இரு நாட்டு நிறுவனங்களும் பாதிப்புக்கு உள்ளாகின. அந்த சமயம் இந்த வர்த்தகப் போர் அமெரிக்கா சீனாவை மட்டும் பாதிக்காது உலக நாடுகளையும் சேர்த்தே பாதிக்கும் என்று கூறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதுஇவ்வாறிருக்க, 2019ம் ஆண்டு வரையிலான உலக நாடுகளின் மொத்த கடன் 255 டிரில்லியன் டொலராக அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் உலகத்தில் உள்ள ஒவ்வொருவர் மீதும் 32 ஆயிரம் டொலர்கள் கடன் இருப்பதாக சர்வதேச நிதியம் தெரிவித்துள்ளது. உலக நாடுகளின் கடன் அதிகரிப்பதில் அமெரிக்கா மற்றும் சீனாவின் பங்கு மிக அதிகமாக இருக்கிறது என்றும் மொத்த கடனில் 60 சதவிதம் இந்த இரண்டு நாடுகளால் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, வட்டி விகிதங்கள் மிகவும் குறைவாக இருப்பதே கடனின் அளவு அதிகரிக்க முக்கிய காரணங்களாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. உலக நாடுகள் வாங்கும் கடனின் அளவு ஒவ்வொரு ஆண்டும் பன்மடங்கு அதிகரிப்பதாக சர்வதேச நிதியம் ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் உலகின் 770 கோடி மக்கள் தொகையில், ஒவ்வொருவர் மீதும் 32 ஆயிரம் டொலர்கள் கடன் இருப்பதாக கூறப்பட்டுள்ளது.



# கடலில் மூழ்கும் கிராமம்!

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் உள்ள சிட்டியோ பரியாஹான் (Sitio Pariahan) என்ற கிராமம் ஒவ்வொரு ஆண்டும் 4 செ.மீ. அளவுக்கு கடலுக்குள் மூழ்கி வருவதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. தலைநகர் மணிலாவிலிருந்து 17 கி.மீ. தொலைவில் உள்ள கிராமம் சிட்டியோ பரியாஹான். முன்பொரு காலத்தில் தனித்தீவாக இருந்த இந்த கிராமம் தற்போது நிலப்பரப்பே இல்லாத அளவுக்கு கடலில் மிதக்கிறது.

புவி வெப்பமயமாதல் பிரச்சினையால் கடலில் உள்ள நீர் மட்டம் அதிகரித்து வருகிறது. இதனால் இந்த கிராமம் கொஞ்சம் கொஞ்சமாக கடலில் மூழ்கி வருகிறது. அதாவது ஒவ்வொரு ஆண்டும் சுமார் 4





செ.மீ. அளவுக்கு கடலில் மூழ்கி வருகிறது. அடிப்படை வசதிகளே இந்த கிராமத்தில் இல்லை. இந்த கிராமத்தில் ஒரே ஒரு கிணறுதான் முக்கிய நீராதாரமாக உள்ளது. கிராம மக்கள் அனைவரும் இந்த கிணற்றை நம்பியே உள்ளனர். இந்த நீரையே குடிக்க, குளிக்க, உணவு சமைக்க பயன்படுத்துகின்றனர்.

அது போல் மின்சாரமும் கிடையாது. பெரும்பாலானோர் சூரிய மின்சக்தி தகடுகள் மூலம் கிடைக்கும் மின்சாரத்தையே பயன்படுத்தி வருகின்றனர். அந்த மின்சாரத்தை அக்கம்பக்கத்து வீடுகளுக்கும் பகிர்ந்தளிக்கின்றனர்.

இந்த கிராமத்தில் நீதிமன்றமும் தேவாலயமும் இருந்தன. ஆனால் அவை 2011ம் ஆண்டு ஏற்பட்ட புயலில் அழிந்துவிட்டன. இந்த புயலில் பாடசாலையும் அதன் சுற்றுச்சுவரும் அடித்து சென்றுவிட்டது. 50-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் இந்த கிராமத்தை விட்டு வெளியேறிவிட்டனர். இன்னும் திரும்பவில்லை.

அந்த கிராமத்தில் உள்ள மக்கள் அனைவரும் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியவர்கள் என்பதால் வேறு எங்கும் செல்ல முடியாமல் இன்னல்களுக்கு மத்தியில் அங்கேயே வசித்து வருகின்றனர். கடலின் நீர்மட்டத்தின் உயரம் அதிகரிக்க அதிகரிக்க கிராம மக்கள் மூங்கில்களை கொண்டு வீட்டின் உயரத்தை உயர்த்தி வருகின்றனர். இது நிரந்தர தீர்வாகாது என்றும் விரைவில் இந்த கிராமம் முழுமையாக கடலில் மூழ்கி விடும் என்றும் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் எச்சரிக்கின்றனர். இந்த கிராமத்தை விட்டு வெளியே வர தற்போது படகுகளையே மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

## காலநிலை மாற்ற அனர்த்தங்களால் இரு விநாடிகளுக்கு ஒருவர் இடம்பெயர்வு

காலநிலை மாற்றத்தால் அதிகரித்து வரும் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக ஒவ்வொரு வருடமும் 20 மில்லியன் பேர் தமது வீடு வாசல்களை இழந்து இடம்பெயரும் நிர்ப்பந்தத்திற்குள்ளாகி வருவதாகவும் இதன் பிரகாரம் ஒவ்வொரு இரு செக்கன்களுக்கும்



இருவர் என்ற வகையில் இடம்பெயர்வு இடம்பெற்று வருவதாகவும் புதிய ஆய்வொன்று தெரிவிக்கிறது.

பூகோள ரீதியான அனர்த்தங்கள் மற்றும் மோதல்களால் இடம்பெறுவதை விடவும் வெள்ளங்கள், சூறாவளிகள் மற்றும் காட்டுத் தீ சம்பவங்களால் அதிகளவான மனித இடம்பெயர்வுகள் இடம்பெற்று வருவதாக தொண்டு நிறுவனமான ஒக்ஸ்பாம் இன்டர் நஷெனல் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட மேற்படி ஆய்வறிக்கை கூறுகிறது. 2008ம் ஆண்டுக்கும் 2018ம் ஆண்டுக்குமிடையிலான காலப் பகுதியில் சூறாவளிகள் மற்றும் புயல்களால் 90 சதவீதமான இடம்பெயர்வுகள் இடம்பெற்றுள்ளதாகவும் மோசமான கால நிலையால் செல்வந்த நாடுகளைச் சேர்ந்தவர்களை விடவும் இந்தியா, நைஜீரியா, பொலிவியா போன்ற தாழ்ந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் நாடுகளைச் சேர்ந்த மக்கள் நான்கு மடங்கிற்கும் அதிகமான அளவில் இடம்பெயர்ந்து வீடுவாசலற்று வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை யில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## பென்டகன் மீது அமேசான் வழக்கு


அமெரிக்க இராணுவத்தின் தலைமையகமான பென்டகன் மீது உலகின் முன்னணி இணைய வர்த்தக நிறுவனமான அமேசான் வழக்கு தொடர்ந்துள்ளது. அமெரிக்க இராணுவத்தின் தலைமையகமான பென்டகனை இலத்திரனியல் (டிஜிட்டெல்) மயமாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 10 பில்லியன் டொலருக்கு ஒப்பந்தம் விடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தை பெற அமெரிக்காவை சேர்ந்த பிரபல பன்னாட்டு நிறுவனங்களான மைக்ரோ சொப்ட்டும், அமேசானும் விண்ணப்பித்தன. இந்த ஒப்பந்தம் அமேசானுக்கு கிடைக்க வாய்ப்பிருப்பதாக கூறப்பட்ட நிலையில், திடீரென மைக்ரோசொப்ட்டுக்கு பென்டகன் ஒப்பந்தத்தை வழங்கியது. இது அமேசான் நிறுவனத்துக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஒப்பந்தத்தை ஒதுக்கீடு செய்வதில் முறைகேடு நடந்ததாக பென்டகன் மீது அமேசான் குற்றம் சாட்டியது.

இந்த நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக பென்டகன் மீது வாஷிங்டன் நீதிமன்றத்தில் அமேசான் நிறுவனம் வழக்கு தொடர்ந்துள்ளது. இது குறித்து அந்த நிறுவனத்தின் செய்தி தொடர்பாளர் டூரு ஹெர்டனர் கூறுகையில், மதிப்பீட்டு செயல்முறையின் பல அம்சங்களில் குறைபாடுகள், பிழைகள் மற்றும் தெளிவற்ற சார்பு ஆகியவை உள்ளன. இந்த விடயங்களை ஆராய்ந்து சரிசெய்ய வேண்டியது அவசியம் என்றார்.

இதற்கிடையே அரசின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டே ஒப்பந்த ஒதுக்கீடு நடந்துள்ளதாகவும், நீதித்துறையுடன் சேர்ந்து, இந்த வழக்கை ஆய்வு செய்வோம் என்றும் பென்டகன் தெரிவித்துள்ளது.

## சீனாவுக்கு உளவு வேலை அமெரிக்க அதிகாரிக்கு 19 ஆண்டு சிறை!

அமெரிக்க உளவுத்துறையில் (சி.ஐ.ஏ.) அதிகாரியாக இருந்தவர் ஜெர்ரி சுன் ஷிங் லீ (வயது 55). இவருக்கு நாட்டின் முக்கிய இராணுவ இரகசியங்கள் தெரியும். இவர் மூலமாக சில முக்கிய இராணுவ இரகசிய தகவல்களை பெறுவதற்காக சீனா தரப்பில் 1 இலட்சம் டொலர் தருவதாக விலை பேசி உள்ளனர். அது மட்டுமின்றி இந்த ஒத்துழைப்புக்காக ஆயுள்காலம்



முழுவதும் கவனித்துக்கொள்வோம் என்றும் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

அதற்கு ஜெர்ரி சுன் ஷிங் லீ இணங்கியதுடன், பணத்துக்காக சொந்த நாட்டுக்கே துரோகம் செய்துவிட்டார். சீனாவுக்காக உளவு வேலை பார்த்து முக்கிய தகவல்களை அளித்துள்ளார். அவர் சீன தரப்பில் பெற்ற இலஞ்சப் பணத்தை வங்கியில் வைப்பிட்டுள்ளார். இதையெல்லாம் அமெரிக்கா கண்டுபிடித்து விட்டது. இதைத் தொடர்ந்து லீயை கைது செய்து அமெரிக்க நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணையின்போது தன் மீதான உளவு குற்றச்சாட்டுகளை லீ ஒப்புக்கொண்டார். இதையடுத்து அவருக்கு 19 ஆண்டு சிறைத்தண்டனை விதித்து அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

## போர்க் குற்றவாளிக்கு மன்னிப்பு ஏற்க மறுத்த அமெரிக்க கடற்படை செயலர் நீக்கம்

போர்க் குற்றத்தில் ஈடுபட்ட சிறப்பு அதிரடிப் படையினனுக்கு பொதுமன்னிப்பு வழங்கும் விவகாரத்தில், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் உத்தரவை

»»

ஸ்பெயினில் கடந்த 4 ஆண்டுகளில் 4வது முறையாக பொதுத் தேர்தல் கடந்த 10ம் திகதி நடைபெற்றது. கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற தேர்தலுக்குப் பிறகு பிரதமராகப் பொறுப்பேற்ற பெட்ரோ சான்ஷெசால் நாடாளு

»»

சீன ரயில்வே எனப்படும் சீனத் தேசிய இரும்புப்பாதை நிறுவனத்தின் அறிவியல் தொழில்நுட்பத்துக்கான புத்தாக்கக் கூட்டம் நவம்பர் 22ம் திகதி நடைபெற்றது. இந்நிறுவனத்தின் பொறுப்பாளர் இக்கூட்டத்தில் தெரிவிக்கையில், 2019ம் ஆண்டுக்குள், சீனாவின் இரும்புப்பாதையின் நீளம் ஒரு இலட்சத்து 39 ஆயிரம் கிலோ மீற்றரைத் தாண்டும். இதில் அதிவிரைவு தொடர்வண்டிக்கான இரும்புப்பாதையின் நீளம் 35 ஆயிரம்



கிலோ மீற்றராகும். இது, உலகின் முதலாவது இடத்தை வகிக்கிறது. 2019ம் ஆண்டு, தொடர்வண்டி மூலம் பயணித்த மக்களின் எண்ணிக்கை 360 கோடியாகும். இது, 2012ம் ஆண்டில் இருந்ததை விட 92 விழுக்காடு அதிகரித்துள்ளது என்றார்.

»»

பாகிஸ்தானில் சிறுபான்மையினர் கட்டாய மதமாற்றம் செய்யப்படுவதைத் தடுப்பதற்கான சட்டத்தை இயற்றுவதற்காக, புதிய நாடாளுமன்றக் குழு அமைக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் சிறுபான்மையினர் கட்டாயமாக இஸ்லாம் மதத்துக்கு மாற்றப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றன. இந்தப் பிரச்சனைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில், கட்டாய மதமாற்றத்தைத் தடுப்பதற்கான சட்டத்தை இயற்ற அரசு முடிவு செய்துள்ளது. அந்தசட்ட வரைவை உருவாக்குவதற்காக, 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய நாடாளுமன்றக் குழுவை நாடாளுமன்றச் செயலகத் தலைவர் சாதிக் சஞ்ரானி நியமித்துள்ளார். மதமாற்றத் தடைச் சட்ட அம்சங்கள் குறித்து இந்த நாடாளுமன்றக் குழு முடிவெடுக்கும்.

»»

சட்டவிரோதமான முறையில் மலேசியாவுக்கு அனுப்பப்பட்ட 42 கொள்கலன்களில் நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளை திரும்பப் பெறுவதற்கு பிரித்தானியா முடிவுசெய்துள்ளது. முறையான அனுமதி இல்லாது நூற்றுக்கணக்கான கொள்கலன்களில் வந்த பிளாஸ்டிக் கழிவுகள் மலேசியா முழுவதும் உள்ள துறைமுகங்களில் வைக்கப்பட்டுள்ளன. இந் நிலையில் பிரித்தானியாவிலிருந்து 2018ம் ஆண்டு முதல் கடந்த மார்ச் மாதம் வரை மலேசியாவின் பினாங்கு துறைமுகத்திற்கு முறையான அனுமதி இல்லாது சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட குறித்த 42 கொள்கலன்களில் அடங்கிய பிளாஸ்டிக் கழிவுகளை திரும்பப் பெறுவதற்கு பிரித்தானியா முடிவுசெய்துள்ளதாக மலேசியாவின் சுற்றுச்சூழல் அமைச்சகம் மற்றும் பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

»»

பிரித்தானியாவில் சிறை வைக்கப்பட்டுள்ள விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜுலியன் அஸாஞ்சே உடல் மற்றும் மன ஆரோக்கியம் குறித்து பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 60ற்கும் மேற்பட்ட மருத்துவர்கள் பிரித்தானிய அதிகாரிகளிடம் கவலை தெரிவித்துள்ளனர்.



ஜுலியன் அஸாஞ்சேவுக்கு அவசர மருத்துவ சிகிச்சைகள் அளிக்காவிட்டால் அவர் சிறையிலேயே இறக்கக் கூடும் என்று மருத்துவர்கள் திறந்த கடிதம் எழுதியுள்ளனர். பிரித்தானிய உட்துறை செயலர் ப்ரீத்தி படேல் மற்றும் நிழல் உட்துறை செயலர் டயான் அபோட் ஆகியோருக்கு எழுதப்பட்ட இந்த கடிதத்தை விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது.

»»

பிரித்தானியாவில் பாரவண்டியில் இருந்து உயிரிழந்த நிலையில் கண்டெடுக்கப்பட்ட 39 வியட்நாமியர்களில் அடையாளங்கள் உறுதிப்படுத்தப்பட்ட சடலங்களில் 16 பேரின் சடலங்கள் தாய் நாட்டிற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. கடந்த ஒக்டோபர் மாதம் 23ம் திகதி இலண்டனுக்கு கிழக்கே உள்ள எஸ்ஸெக்ஸ் என்ற பகுதியில் இந்த சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. இவ்வாறு சடலங்களாக மீட்க்கப்பட்டவர்கள் 15 முதல் 44 வயதுக்குட்பட்ட 31 ஆண்களும் 8 பெண்களும் அடங்கியிருந்தனர்.

»»

பிரான்ஸ் ஓவியர் பியேர் சூலாஜஸின் ஓவியம், 1.05 கோடி டொலருக்கு ஏலத்தில் விற்பனையாகி உலக சாதனை படைத்துள்ளது. கறுப்பு வண்ணத்தை மட்டுமே பயன்படுத்தி ஓவியம் வரைவதில் புகழ்பெற்ற சூலாஜஸ் 1960ம் ஆண்டு தீட்டிய ஓவியம் இந்தச் சாதனையை படைத்துள்ளது. வரும் டிசம்பரில் சூலாஜஸக்கு 100 வயது பூர்த்தியாவது குறிப்பிடத்தக்கது.

»»

தனது ஆட்சிக் காலத்தின்போது சட்டவிரோதமாக பணம் பரிமாற்றம் மூலம் 10 இலட்சம் டொலர் முறைகேட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில், மாலத்தீவு முன்னாள் அதிபர் யாமீன் அப்துல் கயூமுக்கு அந்நாட்டு நீதிமன்றம் 5 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்தது. மேலும், அவருக்கு 50 இலட்சம் டொலர் அபராதமும் விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

»»

வரும் 2020ம் ஆண்டுடன் நிறைவடையவிருக்கும் பதின்ம ஆண்டில் தான் புவியின் வெப்பம் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகரித்திருக்கும் என்று ஐ.நா. தெரிவித்துள்ளது. இது குறித்து அந்த அமைப்பின் வானியல் பிரிவான உலக வானிலை அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்: தொழில் புரட்சிக்கு முன்பிருந்ததைவிட உலகின் வெப்பநிலை இந்த ஆண்டில் இதுவரை 1.1 பாகை செல்ஷியஸ் அதிகமாக உள்ளது. இதன் மூலம், இதுவரை பதிவு செய்யப்பட்டதிலேயே அதிக புவி →

ஏற்க மறுத்த கடற்படைச் செயலர் ரிச்சேர்டு ஸ்பென்ஸர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இதுகுறித்து பாதுகாப்புத் துறை அமைச்சர் மார்க் எஸ்பெர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: சிறப்பு அதிரடிப் படையினன் எட்வேர்ட் காலங்கெருக்கு பொதுமன்னிப்பு வழங்கும் விவகாரத்தில், கடற்படைச் செயலர் ரிச்சேர்ட் ஸ்பென்ஸன் நடந்து கொண்ட விதம் வருத்தமளிக்கிறது. இதன் மூலம் அவர் எனது நம்பிக்கையை இழந்துவிட்டார். தனது பதவியில் தொடரும் தகுதியையும் அவர் இழந்துவிட்டார். எனவே, அவரை பதவி நீக்கம் செய்ய உத்தரவிட்டுள்ளேன் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மார்க் எக்ஸ்பெரின் இந்த முடிவை அதிபர் டொனால்ட் டிரம்ப் வரவேற்றுள்ளார்.

இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) பயங்கரவாதிகளிடமிருந்து ஈராக்கின் மொசூல் நகரை மீட்பதற்காக 2016 – 2017ம் ஆண்டுகளில் அந்நாட்டு இராணுவம் மற்றும் ஆயுதக் குழுக்களுடன் இணைந்து அமெரிக்கப் படையினர் போரில் ஈடுபட்டனர். அந்தப் போரில் பங்கேற்ற அமெரிக்க கடற்படை சிறப்பு அதிரடிப் படையினன் எட்வேர்ட் காலங்கெர், போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. கொலை, கொலை முயற்சி, நிராயுதபாணிகள் மீது பயங்கர ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல், நீதி பரிபாலனத்துக்கு இடையூறு விளைவித்தது, போரில் கொல்லப்பட்டவரின் சடலத்துடன் அனுமதி இல்லாமல் படம் வெளியிட்டது, உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன.

எட்வேர்ட் காலங்கெர் வெளியிட்டிருந்த சர்ச்சைக்குரிய படத்தில் இருந்த சடலம், அவரால் கொல்லப்பட்டவருடையது என்று வழக்கு விசாரணையின்போது அவருடன் பணியாற்றிய மற்றொரு படையினன் வாக்குமூலம் அளித்திருந்தார். எனினும், சட்டவிரோதமான படம் வெளியிட்ட குற்றச்சாட்டைத் தவிர, மற்ற அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் காலங்கெர் விடுவிக்கப்பட்டார்.

எனினும், படம் வெளியிட்ட குற்றத்துக்காக அவர் பதவி இறக்கம் செய்யப்பட்டார். எனினும், காலங்கெருக்கு பொதுமன்னிப்பு அறிவித்த அதிபர் டொனால்ட் டிரம்ப், அவருக்கு வழங்கப்பட்டிருந்த தண்டனையை இரத்து செய்ய உத்தரவிட்டார். அந்த உத்தரவை ஏற்க கடற்படைச் செயலர் ரிச்சேர்ட் ஸ்பென்ஸர் மறுத்ததாக தகவல்கள் வெளியாகின. இந்த நிலையில், அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டதாக தற்போது பாதுகாப்புத் துறை அமைச்சர் மார்க் எஸ்பெர் தெரிவித்துள்ளார்.

## துருக்கியில் எஸ்–400 பரிசோதனை அமெரிக்கா கவலை

ரஷ்யாவிடமிருந்து வாங்கியுள்ள அதி நவீன எஸ்–400 வான் பாதுகாப்பு தளவாடத்தை தங்கள் நாட்டுத் தயாரிப்பான எஃப்–16 போர் விமானங்களைப் பயன்படுத்தி துருக்கி பரிசோதித்துள்ளது. இந்நடவடிக்கை குறித்து அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மைக்கேல் பாம்பேயோ கூறியதாவது: அமெரிக்கத் தயாரிப்பான எஃப்–16 விமானத்தைப் பயன்படுத்தி, ரஷ்யாவின் எஸ்–400 வான் பாதுகாப்பு ஏவுகணை தளவாடத்தை துருக்கி சோதித்துப் பார்ப்பது மிகவும் கவலைக்குரியதாகும்.

எனினும், இந்த விவகாரம் குறித்து துருக்கியுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். எஸ்–400 ஏவுகணைத் தளவாடத்தை துருக்கி முழுமையான பயன்பாட்டுக்கு இணைத்துக் கொள்ளக் கூடாது என்று நாங்கள் அந்த நாட்டிடம் தொடார்ந்து வலியுறுத்தி வருகிறோம். இந்த விவகாரத்தில் கூடிய விரைவில் தீர்வு கிடைக்கும் என்று நம்புகிறேன் என்றார்.

ஏவுகணைகள் மற்றும் விமானங்களை தரையிலிருந்து வானில் இடைமறித்து தாக்கி அழிக்கும் ரஷ்யாவின் அதிநவீன எஸ்–400 ஏவுகணை எதிர்ப்புத் தளவாடங்களை, துருக்கி அண்மையில் வாங்கியது. அமெரிக்காவின் எதிர்ப்பையும் மீறி இந்த ஆயுதக் கொள்முதலில் துருக்கி ஈடுபட்டது. அதற்குப் பதிலடியாக, ரடார் கண்களுக்குப் புலப்படாத தனது அதிநவீன எஃப்–35 ரக போர் விமானங்களை துருக்கிக்கு விற்பனை செய்யும் திட்டத்தை அமெரிக்கா இடைநிறுத்தியது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, எஸ்–400 வான் பாதுகாப்பு ஏவுகணைகளை இந்தியாவும் வாங்கியுள்ளதுடன், விரைவில் அவை இந்தியாவிடம் ரஷ்யா ஒப்படைக்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# வடகொரியாவில் ஒரு கனவு நகரம் திறந்து வைத்தார் கிம் ஜங் உன்

வடகொரியாவில் தனது கனவு நகரத்தை அந்நாட்டு அதிபர் கிம் ஜங் உன் கடந்த 3ம் திகதி நாடாவை வெட்டி திறந்து வைத்துள்ளார். கிம் ஜங் உன் குடும்பத்தினரின் பூர்வீகமாக கருதப்படும் பேக்டு மலைக்கு அருகே, நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பில் சொகுசு வசதிகளுடன் அமைந்துள்ள இந்த நகரத்துக்கு ‘சம்ஜியோன்’





என்று பெயரிடப்பட்டுள்ளது. வட கொரியாவின் அடையாளமொன்றாகவும் கிம் ஜங் உன்னின் தந்தையும் அவருக்கு முன்னர் அந்நாட்டை ஆட்சி செய்த மறைந்த தலைவருமான கிம் யொங் இல்லின் பிறப்பிடமாக பேக்து மலைக்கு அருகில் இந்த நகர் அமைந்துள்ளது. இந்த நகரத்தில் 4 ஆயிரம் குடும்பங்கள் வசிக்க முடியும்.

அந்நாட்டின் அரசு நாளிதழ் வெளியிட்ட செய்தியில், கிம் ஜங் உன் சம்ஜியோன் நகரத்தை திறந்து வைக்கும் காட்சி மற்றும் மக்களின் கொண்டாட்டங்கள் நிறைந்த பல படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அடுக்குமாடி குடியிருப்புகள், நட்சத்திர விடுதிகள், சொகுசு விடுதிகள், கலாசார மையம் மற்றும் உயர்தர மருத்துவமனைகள் என அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய இந்த நகரம் நவீன நாகரிகத்தின் வடிவமாக திகழும் என்று செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடகொரியா மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடைகள் காரணமாக கட்டுமான பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதால் எதிர்பார்த்ததைவிட தாமதமாகவே இந்த நகரம் திறக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. மேலும் கட்டாய தொழிலாளர்கள் மூலமே இந்த நகரம் கட்டி முடிக்கப்பட்டதாகவும், தொழிலாளர்கள் அனைவரும் கொத்தடிமைகள் போல் நடத்தப்பட்டதாகவும் மனித உரிமை ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதுஇவ்வாறிருக்க, வட கொரியா மீண்டும் இரு ஏவுகணைகளை சோதித்துப் பார்த்ததாக தென் கொரியா தெரிவித்துள்ளது. இதுகுறித்து தென் கொரிய கூட்டுப் படை தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: வட கொரியாவின் தெற்கே உள்ள ஹம்கியாங் மாகாணத்திலிருந்து இரு ஏவுகணைகள் ஏவி சோதிக்கப்பட்டன. கிழக்கு நோக்கி ஜப்பான் கடல் பகுதியில் அந்த இரு ஏவுகணைகளும் ஏவப்பட்டன என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கிடையே, அந்த இரு ஏவுகணைகளும் ‘பலிஸ்டிக்’ வகையைச் சேர்ந்தவையாக இருக்கலாம் என்று தெரிவித்த ஜப்பான் பிரதமர், தங்களது பொருளாதார மண்டல எல்லைக்குள் அந்த ஏவுகணைகள் விழவில்லை என்று தெரிவித்திருந்தார்.

இதேவேளை, ஜப்பானிய பிரதமர் ஸன்ஸோ அபே மனோதிடம் இல்லாத அரசியல் குள்ளர் என வட கொரியா குற்றஞ்சாட்டியுள்ளது. ஏவுகணைகளை ஏவுவதற்கான உந்திச் செல்லும் உபகரணங்களை ஏவி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை தொடர்பில் ஜப்பானிய பிரதமரின் தவறான கருத்துக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையிலேயே வடகொரியா இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது. ஜப்பானிய பிரதமர் இந்தப் பரிசோதனையை ஏவுகணைப் பரிசோதனை எனக் குறிப்பிட்டிருந்தார். வடகொரியா ஏவுகணைகளைத் திரும்பத் திரும்ப ஏவுவது எமது நாட்டுக்கு மட்டுமல்லாது சர்வதேச சமூகத்துக்கே தீவிர அச்சுறுத்தலாகவுள்ளது என அபே தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் தாம் ஒரே சமயத்தில் பல ஏவுகணைகளை ஏவக் கூடிய வல்லமையைக் கொண்ட இரு ஏவும்



உபகரணங்களையே ஏவிப் பரிசோதித்ததாக வட கொரியா கூறியுள்ளது. நிழற்படம் சகிதம் அந்தப் பரிசோதனை நடவடிக்கை குறித்து அறிக்கையிடப்பட்டிருந்த நிலையில் ஏவுகணையொன்றையும் பல ஏவுகணைகளை ஒரே சமயத்தில் ஏவுவதற்கு பயன்படும் உபகரணமொன்றையும் வேறுபடுத்தி அறிய முடியாத அபே உலகிலேயே ஒரேயொரு மூடராகவும் வரலாற்றிலேயே மிகவும் முட்டாளாகவும் உள்ளதாகக் கூறமுடியும் என வட கொரிய அரசாங்க ஊடகமான கே.சி.என்.ஏ. தெரிவித்துள்ளது.

அபே நிஜமான கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கக் கூடிய ஏவுகணையை அதிக தொலைவில் அல்லாது விரைவில் தனது மூக்கிற்கு அருகே நெருக்கமாக காண நேரிடலாம். மனோதிடம் அற்ற அரசியல் குள்ளனாக இருப்பதற்கு அபேயை விடவும் பொருத்தமானவர் எவரும் இல்லை என வட கொரிய அரசாங்க ஊடகம் குறிப்பிட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் வட கொரியாவுக்கு ஏவுகணைகளை ஏவுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுடனான அணு ஆயுதப் பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை ஏற்பட்டதைத் தொடர்ந்து, தடை செய்யப்பட்ட ஏவுகணை சோதனைகளை வட கொரியா தொடர்ந்து நடத்தி வருகிறது குறிப்பிடத்தக்கது.

# ‘என்கவுன்டர்’ தீர்வல்ல!

ஒவ்வொரு நாளும் அதிகாலையில் விழிக்கும் போதும் இந்தியாவின் ஏதாவது ஒரு பகுதியில், ஏதாவது ஒரு பெண்ணுக்கு இழைக்கப்படும் பாலியல் அநீதியின் உரத்த ஒலிதான் காதில் விழுகிறது. கடந்த வாரம் ஹைதராபாதின் புகர்ப் பகுதியில் 26 வயது கால்நடை மருத்துவருக்கு இழைக்கப்பட்ட அநீதி தலைப்புச் செய்தியானது என்றால், நேற்று உத்தரப் பிரதேச மாநிலம் உன்னாவில் நடந்தேறியிருக்கும் காட்டு மிராண்டித்தனத்தை நினைத் தால் குலை நடுங்குகிறது. ஏதோ அங்கொன்றும் இங் கொன்றுமாக கேள்விப்பட்ட நிலைமைபோய், அன்றாட நிகழ்வாக மாறியிருக்கும் பெண்களுக்கு எதிரான பாலி யல் வன்கொடுமைகள் ஒட்டு மொத்த இந்தியாவையே உலக அரங்கில் தலைகுனிய வைத் திருக்கிறது.



உத்தரப் பிரதேச மாநிலம் உன்னாவ் மாவட்டத்தைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர், கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானார். சிவம் த்ரிவேதி, சுபம் த்ரிவேதி என்கிற இருவரால் வன்கொடுமைக்கு ஆளான அந்தப் பெண் ணின் அபயக் குரல் காவல்துறையின் செவிகளில் விழவில்லை. மூன்று மாதம் கழிந்து கடந்த மார்ச் மாதம்தான் வழக்கே பதிவு செய்யப்பட்டது.

அந்த வழக்கின் விசாரணை நடந்து வரும் ரேபரேலி நீதிமன்றத்துக்கு அந்தப் பெண் வழக்கு விசாரணைக் காக நேற்று (06.12.2019) சென்று கொண்டிருந்தார். நீதிமன்றத்துக்குச் செல்லும் வழியில் சிவம் த்ரிபாதி, சுபம் த்ரிபாதி உள்ளிட்ட ஐந்து பேர் அந்தப் பெண்ணை சென்ற 18 வயதுகூட நிரம்பாத இளம் பெண், உத்தரப் பிரதேச சட்டப்பேரவை உறுப்பினர் ஒருவரால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான நிகழ்வு நிகழ்ந்தது. அந்தப் பெண் அளித்த புகார் முதலில் காவல் நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவரது வாக்கு–மூலத்தைப் பதிவு செய்த காவல்துறையினர், சட்டப் பேரவை உறுப்பினரான குற்றவாளி மற்றும் அவரது சகோதரரின் பெயரைக்கூட அதில் குறிப்பிடவில்லை.

புகார் கொடுத்து ஓர் ஆண்டாகியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது குறித்து விளக்கம் கேட்ட அந்தப் பெண்ணின் தந்தை, பொய் வழக்கில் கைது செய்யப்பட்டு போலீஸ் காவலில் அடித்துக் கொல் லப்பட்டிருக்கிறார். அது குறித்த முறையான விசாரணை நடத்தப்படவில்லை. அந்தப் பெண்ணின் போராட்டம் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஹைதராபாத் கால்நடை மருத்துவர் நிகழ்விலும், காவல்துறையின் மெத்தனம் வெளிப்பட்டது. அந்தப் பெண் வீட்டுக்கு வரவில்லை என்றபோது அது குறித்து புகார் தெரிவிக்கப்போன பெற்றோர் அலைக்கழிக்கப்



வழிமறித்தனர். அவரைத் தாக்கினார்கள். அவரை உயிருடன் தீ வைத்துக் கொளுத்தினர். உடலெல்லாம் பற்றி எரியும் தீயுடன் அந்தப் பெண் தெரு வழியாக ஓலமிட்டபடி அவர்களிடமிருந்து தப்பி ஓடியிருக்கிறார்.

பொது மக்கள் தகவல் தெரிவித்து, காவல்துறை யினர் வந்து அந்தப் பெண்ணை அருகிலுள்ள ஆரம்ப சுகாதார மையத்துக்குக் கொண்டு சென்றனர். அங்கிருந்து லக்னௌவிலுள்ள மாவட்ட அரசு மருத் துவமனையான சியாம பிரசாத் முகர்ஜி அரசு மருத் துவமனைக்கு அவர் மாற்றப்பட்டார்.

உடலெல்லாம் தீக்காயத்துடன் கவலைக்கிடமான நிலையில் அந்தப் பெண் விமானம் மூலம் தில்லி கொண்டு செல்லப்பட்டு, அங்குள்ள சஃப்தர்ஜங் மருத்துவ மனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார். இந்த வழக்கில் தொடர்புடைய ஐந்து பேரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

பாலியல் வல்லுறவைத் தொடர்ந்து 2018 டிசம்பர் மாதம் தனக்கு இழைக்கப்பட்ட வன்கொடுமைக்கு எதிராக குற்றம் பதிவு செய்ய அந்தப் பெண் நான்கு மாதங்கள் அனுபவித்த இடர்ப்பாடுகள் சொல்லி மாளாது. ரேபரேலி காவல்துறை கண்காணிப்பாளரைச் சந்திக்க அனுமதி கிடைக்காமல் பதிவுத் தபாலில் முறையிட்டும்கூட அவருக்கு நீதி கிடைக்கவில்லை. வேறுவழியில்லாமல் நீதிமன்றத்தை அணுகிய பிறகுதான் காவல்துறையினர் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். அப்போதே உடனடியாக காவல்துறை நடவடிக்கை எடுத்திருந்தால் அந்தப் பெண்ணுக்குஇப்போதைய அவலநிலை ஏற்பட்டிருக்காது.

இதே உன்னாவில் 2017–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வேலைக்காகப் பரிந்துரைக் கடிதம் கேட்டுச் பட்டனர். இதுபோல எல்லா நிகழ்வுகளிலுமே உடன டியாக பாதிக்கப்பட்ட அபலைப் பெண்களுக்கு உதவிக் கரம் நீட்டாமல் காவல்துறை தாமதப்படுத்துவதன் விளைவால்தான் குற்றவாளிகள் பெரும்பாலும் தப்பி விடுகிறார்கள்.

தடயங்கள் உடனடியாகச் சேகரிக்கப்படாமல் இருப்பதும், விரைந்து விசாரணை செய்யப்படாததும், வழக்கை விரைவாக நடத்தி முடிக்காமல் இருப்பதும் தான் பெண்களுக்கு எதிரான பாலியல் வழக்குகளில் அவர்களுக்கு நீதி கிடைக்காமல் இருப்பதற்கு முக்கிய மான காரணம். என்கவுன்ட்டர் மரணங்கள் பொதுமக்க ளின் ஆத்திரத்தைத் தணிக்க உதவுமே தவிர, தீர்வாகாது.

இப்போதைய மக்களவை உறுப்பினர்களில் 43 வீத உறுப்பினர்கள் மீது கிரிமினல் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. 29 வீத உறுப்பினர்கள் மீதான வழக்கு கள் பாலியல் தொடர்பானவை அல்லது பெண்களுக்கு எதிரானவை. 2009–லிருந்து 2019–க்கு இடையிலான கடந்த 10 ஆண்டுகளில் கடுமையான கிரிமினல் வழக்கு களை எதிர்கொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினர்க ளின் விகிதம் 109 வீதம் அதிகரித்திருக்கிறது.

பாலியல் வழக்குகளை எதிர்கொள்வதற்கு போது மான சட்டங்கள் இருக்கின்றன. ஆனால், அவற்றை முறையாகச் செயல்படுத்தாமல் இருப்பதுதான் பிரச்சனை. சட்டம் இயற்றுபவர்கள் குற்றப்பின்னணி உடையவர்களாக இருக்கிறார்கள். சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய காவல்துறையினர் குற்றவாளிகளுக்குச் சாதகமாக இருக்கிறார்கள். இப்படியிருக்கும் வரை இந்தியாவில் பெண்களுக்குப் பாதுகாப்பு இருக்காது!

*நன்றி – தினமணி 07.12.2019*

# சுரிநாம் அதிபருக்கு 20 ஆண்டுகள் சிறை!

## இராணுவ நீதிமன்றம் தீர்ப்பு

அரசியல் எதிரிகளைப் படுகொலை செய்த குற்றத் துக்காக, தென் அமெரிக்க நாடான சுரிநாம் அதிபர் தேசி பவுட்டர்ஸ்சுக்கு அந்த நாட்டு இராணுவ நீதிமன்றம் 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

தென் அமெரிக்கா கண்டத்தில் அமைந்துள்ள சிறிய நாடான சுரிநாம், 1975ம் ஆண்டு நெதர்லாந்திடம் இருந்து சுதந்திரம் பெற்றது. இந்நாட்டின் தற்போதைய அதிபர் தேசி பவுட்டர்ஸ் (74 வயது).

1980ம் ஆண்டு ஆட்சியைப் பிடித்த தேசி பவுட்டர்ஸ், அந்த நாட்டின் இராணுவ ஆட்சியாளராக 1987ம் ஆண்டு வரை இருந்தார். அதனைத் தொடர்ந்து, அந்த நாட்டில் ஜனநாயக ஆட்சி ஏற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, தேர்தலில் தொடர்ந்து போட்டியிட்ட அவர் 2010ம் ஆண்டு வெற்றி பெற்று நாட்டின் அதிபராகப் பொறுப் பேற்றார். அதனைத் தொடர்ந்து, 2015ம் ஆண்டு தேர்த லில் வெற்றி பெற்ற அவர், தொடர்ந்து அதிபராகப் பொறுப்பு வகித்து வருகிறார். இந்த நிலையில், 1980ம் ஆண்டு சுரிநாம் நாட்டில் ஆட்சி கவிழ்க்கப்பட்டபோது, ஆட்சியை பிடித்த பவுட்டர்ஸ் தற்போது வரை சுரிநாம் அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வருகிறார். ஆனாலும் இவர் மீது போதைப்பொருட்கள் வழக்கில் குற்றவாளி என நிருபிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இவர் மீது கொலை வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன.

1982ம் ஆண்டு பவுட்டர்ஸ் ஆட்சியில் இருந்தபோது அவரது எதிர்ப்பாளர்களான 15 நபர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது மிகப்பெரிய சர்ச் சையை ஏற்படுத்தியது. டிசெம்பர் கொலைகள் என அழைக்கப்படும் அந்த சம்பவத்தில் 13 பொது மக்கள் மற்றும் இரண்டு இராணுவ அதிகாரிகள் என 15 பேருக்கு



மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக 2007ம் ஆண்டு பவுட்டர்ஸ் மற்றும் 24 நபர்கள் மீது இராணுவ நீதிமன் றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த குற்றச்சாட்டுகளை மறுத்த பவுட்டர்ஸ், கொலை நடந்த சமயத்தில் தான் வேறு இடத்தில் இருந்ததாகவும், தப்பிச்செல்ல முயன்ற காரணத்தால் அவர்கள் 15 பேரும் கொல்லப்பட்டார்கள் என தெரிவித்தார். விசாரணை நடைபெற்று வந்த நிலையில் அனைத்து தரப்பு வாதங்களும் முடிவடைந்த பின்னர், பவுட்டர்சுக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து இராணுவ நீதிமன்றம் கடந்த 29ம் திகதி தீர்ப்பளித்து உத்தரவிட்டது.

சீனாவிற்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள பவுட்டர்ஸ் தீர்ப்பைக் கேள்விப்பட்டு, தனக்கு தண்டனை விதிக்கப்பட்டிருப்பது குறித்து அதிர்ச்சி அடைந்தார். ஆனாலும் அவர் நாடு திரும்பிய உடன் தண்டனை தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்போவதாக அவரது வழக்கறிஞர் இர்வின் கன்ஹாய் அறிவித்துள் ளார். சுரினாம் நாட்டின் சட்டப்படி அனைத்து விதமான மேல்முறையீடுகளையும் செய்து முடிக்கிற வரையில் தண்டிக்கப்பட்ட ஒருவரை கைது செய்யமாட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த கொலை வழக்கில் தொடர்பு டையவர்கள் என சந்தேகப்படும் குற்றவாளிகளில் 6 பேர் ஏற்கனவே இறந்து விட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வெப்பம் கொண்ட 3 ஆண்டுகளில் ஒன்றாக 2019ம் ஆண்டு ஆகியுள்ளது.

»»»

ஈரானில் திருமண நிகழ்ச்சியின் போது எரிவாயுக் குழாய் வெடித்து 5 குழந்தைகள், 5 பெண்கள் உள்பட 11 பேர் பலியாகினர். அந்த நாட்டில்



குர்துகள் அதிகம் வசிக்கும் சாக்கெஸ் நகரில் ஏற்பட்ட இந்த விபத்தில் மேலும் 42 பேர் காயமடைந்ததாகவும், அவர்க ளில் 3 பேரது நிலைமை கவலைக் கிடமாக இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எரிவாயுக் குழாயில் ஏற்பட்ட கசிவே இந்த விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

»»»

மலேசியாவில் சுமத்ரான் காண்டா மிருக இனம் முற்றிலும் அழிந்துள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமத்ரான் இன காண்டாமிருகம் தற்போது அழி வின் விளிம்பில் இருக்கும் உயிரின மாகும். ஒரு காலத்தில் ஆசியா கண்டம் முழுவதும் பரந்து காணப்பட்ட சுமத்ரான் காண்டாமிருகத்தின் எண்ணிக்கை தற்போது வெறும் 100 ஆக குறைந்து விட்டதாக கூறப்படுகிறது. இந்நிலையில் மலேசியா நாட்டில் சுமத்ரான் இனத்தில் கடைசியாக எஞ்சியிருந்த, இமான் என்ற ஒரே ஒரு பெண் காண்டாமிருகம் புற்றுநோய் காரணமாக கடந்த வாரம் இறந்துள்ளது. இதன் மூலம், சுமத்ரான் காண்டாமிருக இனம் தங்களது நாட்டில் முற்றிலும் அழிந்துவிட்டதாக மலேசியா அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

»»»

பால்வெளி மண்டலத்தில் இதுவரை விஞ்ஞானிகள் கண்டுபிடித்த கருத்து ளைகள், சூரியனை விட 20 மடங்கு பெரிதானவை என்றுதான் மதிப்பிடப்பட் டிருந்தது. ஆனால், தற்போது சூரியனை விட 70 மடங்கு பெரிய கருத்துளை ஒன்றை சீனாவின் தேசிய வானியல் ஆராய்ச்சி மையத்தில் (என்ஏஓசி) ஆய்வு மேற்கொள்ளும் விஞ்ஞானிகள் குழு கண்டுபிடித்துள்ளது. இதற்கு எல்பி–1 என பெயரிடப்பட்டுள்ளது. இந்த கருந்துளை பூமியில் இருந்து 15 ஆயிரம் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள தாக இயற்கை என் அறிவியல் இதழில் வெளியான கட்டுரையில் குறிப்பிடப்பட் டுள்ளது. இது குறித்து என்ஏஓசி பேரா சிரியர் லியு கூறியதாவது: கருந்து ளைகள் அருகில் உள்ள நட்சத்திரத்தில் இருந்து வாயுக்களை விழுங்கும் போது, சக்தி வாய்ந்த எக்ஸ்–கதிர்களை வெளிப் படுத்தும்.

லமோஸ்ட் LAMOST என்ற மிகப் பெரிய தொலை நோக்கிகள் மூலம் ஆய்வு செய்தோம். பல நட்சத்திரங்கள் ஈர்ப்பு விசை மூலம் கண்ணுக்கு தெரி யாத ஒரு பொருளை மையமாக வைத்து சுற்றிக் கொண்டிருந்தன. அப்போதுதான் சூரியனைவிட 70 மடங்கு பெரியதான கருந்துளை ஒன்றை, சூரியனை விட 8 மடங்கு பெரிதான நட்சத்திரம் ஒன்று, 79 நாட்களுக்கு ஒரு முறை சுற்றிக் கொண்டிருப்பதை கண்டறிந்தோம். இந்த எல்பி–1 கருந்துளை, வான் இயற் பியலில் மற்றொரு முக்கியமான கண்டு பிடிப்பு என்றார்.

# தமிழர்களின் அமைதி....

மக்கள் போக்குவரத்துச் செய்யும் வீதிகளில் முன்னர் இருந்து பின்னர் அகற்றப்பட்ட வீதித் தடைகள் மீண்டும் முளைத்துள்ளன. அத்தோடு கைது செய்யும் படலமும் ஆரம்பமாகிவிட்டது.

கோத்தபாய ராஜபக்சவைப் படுகொலை செய்ய முயற்சித்தார்கள் எனத் கூறி வன்னி மற்றும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவர் உட்பட 05 பேர் கட்டுநாயக்கா பகுதியில் வைத்து அண்மையில் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த முகமது றிப்கான், கிளிநொச்சி அக்கராயன்குளத்தைச் சேர்ந்த கணேசலிங்கம் மதன், விசுவமடு தர்மபுரத்தைச் சேர்ந்த வேலு கோணேஸ்வரம், விசுவமடு கல்லாறு பிரதேசத்தைச் சேர்ந்த குணரத்னம் நகுலேஸ்வரன், மற்றும் மஸ்கெலியாவைச் சேர்ந்த ஆரியராஜன் கமலராஜா ஆகியோரே கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மதன் எனும் சந்தேகநபருடைய சகோதரிகள் இருவர் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் எனவும் அவர்களில் ஒருவருக்கு இதுவரை புனர்வாழ்வு அளிக்கப்படவில்லை என்பது விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாகவும் சிங்கள ஊடகம் ஒன்று தெரிவித்திருந்தது. கைது செய்யப்பட்ட நபர்களில் நால்வர் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் பிரதான நபர் எனக் கூறப்படும் முஸ்லிம் நபர் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

உண்மையிலேயே இது கைது என்ற பெயரில் நடத்தப்பட்ட நாடகம் என தெரியவருகின்றது. தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் பாதுகாப்பு நெருக்கடிகளை இறுக்குவதற்கும் தமிழ் - முஸ்லிம் மக்களையும் மலையகத் தமிழர்களையும் நெருக்கடிகளுக்குள் தள்ளுவதற்கும் திட்டமிட்டுச் செய்யப்பட்ட நடவடிக்கை எனவும் தெரியவந்துள்ளது.

தேர்தலுக்கு பின்னர் தெரிவுசெய்யப்பட்ட அமைச்சரவையில் முஸ்லிம்களுக்கு இடமளிக்கப்படவில்லை. தமது மிக விசுவாசமான இருவருக்கு குறிப்பாக, கடந்த காலங்களில் தமிழ் இளைஞர்களைக் கொன்று குவிப்பதற்கு கோத்தபாய ராஜபக்சவுக்கு உதவிய ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளர் கொலைக் குற்றவாளி டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆறுமுகம் தொண்டமான் ஆகிய இருவருக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இதில் இருவேறு விடங்கள் தங்கியிருக்கின்றன, ஒன்று கடந்த காலத்தில் தமது அராஜகங்களுக்கு உதவியமைக்கு நன்றிக்கடன் செலுத்துவது, மற்றையது இந்தியா மற்றும் மேற்கு நாடுகளைத் திருப்திப்படுத்துவது. ஆனால், முஸ்லிம்களை புறக்கணித்ததன் மூலம் சிங்களத் தரப்பிற்கு தமது முஸ்லிம் எதிர்ப்பை வெளிப்படுத்தி இருக்கிறார் கோத்தபாய.

இவற்றின் பின்னணியிலேயே மேற்படி கைது நாடகத்தையும் நோக்கவேண்டும். கோத்தபாயவைக் கொலை செய்வதற்கு முயன்றார் எனக் கூறப்பட்டு ஏற்கனவே சிவரூபன் என்ற வைத்தியர் கைது செய்யப்பட்டுள்ளார் என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டியது. கைது என்ற நாடகத்தின் பின்னர் தமிழ் - முஸ்லிம் பிரதேசங்களில் இராணுவ சோதனைகளும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

தமிழர் தாயகத்தை தொடர்ந்தும் பதற்றத்தில் வைத்திருப்பதன் மூலம் தமிழர்களை அச்சத்தின் பிடியில் வைத்திருந்து அவர்களின் விடுதலைக் கோரிக்கையை அடக்குவதே சிங்களத் தரப்பு கையாண்டுவரும் உத்தி. அந்த உத்தியை கோத்தபாய ராஜபக்ச கனகச்சிதமாகவே கடைப்பிடிப்பவர். தற்போதும் கடைப்பிடிக்கின்றார்.

மாவீரர் தினத்திற்கு சில தினங்களின் பின்னர் தாம் இந்தியாவிற்கு பயணம் மேற்கொள்ளும் திகதியை நிர்ணயித்திருந்த கோத்தபாயவிற்கு எதிராக இந்தியாவில் அதுவும் தமிழ்நாட்டில் எழக்கூடிய போராட்டங்களைத் தவிர்ப்பதற்கும் அடுத்துவரும் மாதங்களில் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லும்போது அங்கு இடம்பெறக்கூடிய எதிர்ப்பு அலைகளைக் குறைப்பதற்கும் கோத்தபாய கையாண்ட மிகச் சிறந்த இராஜதந்திரமே மாவீரர் தினத்திற்கான அனுமதி வழங்கல் ஆகும்.

கோத்தபாயவின் நகர்வுகளுக்கு எதிராக - அல்லது கோத்தபாவின் தமிழின விரோத செயற்பாட்டை தடுத்து நிறுத்தி அதில் இருந்து தமிழ் மக்களின் விடுதலைக் கோரிக்கையை முன்கொண்டு செல்வதற்கு - தமிழர் தரப்பு என்ன உத்தியைக் கையாளப்போகின்றது என்பதை இதுவரை தமிழ்த் தலைமைகள் வெளிப்படுத்தவில்லை. குறிப்பாக, கோத்தபாயவின் அராஜகத்தை எதிர்கொள்வதற்கு இன்னும் தமிழர் தரப்பு தயாராகவில்லை என்பதே உண்மையானது.

தமிழர்களின் இந்த அமைதிப்போக்கு சிங்களத் தரப்பை, அதுவும் கோத்தபாய போன்ற கடும்போக்குவாதிகளுக்கு சாதகமாக அமைந்துவிடும் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். தமிழ்த் தேசியத்தின் வழி பயணிக்கும் கட்சிகளும், தமிழ்த் தேசியத்தின் வழி பயணிக்கும் அமைப்புக்களும் கோத்தபாய தலைமையிலான சிங்கள அராஜகத்தை எதிர்ப்பதற்கு விரைவாக ஒன்றிணைந்து தயாராகவேண்டும் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

## அரிச்சந்திரன் பதில்கள்

அடுத்து கூடுதல் பிரச்சனை. அவளுடைய கணவருக்கும் குழந்தைகளுக்கும் கடவுச்சீட்டு இல்லை. சிறீலங்காவிற்கு விசா கிடைப்பது அரிது. அதுவும் குடும்ப விசா குதிரைக்கொம்பு. அப்படி விசா கிடைத்தாலும், வந்து சேர்வதற்கு குறைந்தது 4 வாரங்கள் ஆகும். அதுவரை குழந்தை தாங்குமா என்ற பல சங்கடங்களை அவரிடம் விவரித்தேன். அவரோ, என் மனைவி ஒரு அமீரா (இளவரசி) என்று கூறி, அதிசயத்திலும் அதிசயமாக 2 நாட்களில் அனைத்தும் முடிந்து, அவர்கள் அனைவரும் சவுதி விமான நிலையம் வந்து இறங்கி விட்டார்கள். குழந்தையின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. கசக்கி போட்ட சிறு துண்டு போல கிடந்தது. ஒரு சிறு அசைவு கூட இல்லை.

நேராக அவர்களை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவமனையே பரபரப்பாக ஆகிவிட்டது. குடும்பத்தார்கள் கூட்டம் ஒருபக்கம். நண்பர்கள், நிறுவனத்தில் முக்கிய ஆட்கள் என்று பெரும் கூட்டம். குழந்தை இருந்த அந்த அறைக்குள் சென்றோம். குழந்தை இருந்த நிலையை பார்த்ததும் அந்த வேலைக்கார அம்மணி கதறி விட்டார். அவளை தேற்றி ஆறுதல் படுத்தி, குழந்தைக்கு அருகில் அழைத்துச் சென்றோம். மெதுவாக அம்மணி, ஆதில், ஆதில், ராஜா (தமிழில் தான்) என்று கூற கூற காலின் பெருவிரல் அசைய ஆரம்பித்தது. மருத்துவர் சைகை காட்ட காட்ட அந்த அம்மணி ஆதில் ஆதில்.. ராஜா.. ராஜா.. என் ராஜா.. என்று கூறக் கூற, ஒரே நிசப்தம்.

எனக்கோ எதோ ஒரு திரைப்படம் பார்த்துக்கொண்டு இருப்பது போல ஒரு உணர்வு. சிறிது சிறிதாக குழந்தையிடம் அசைவு தெரிய... அனைவர்களின் முகத்திலும் பிரகாசம் தெரிய ஆரம்பித்தது.

ஒரு 20 நிமிடத்தில் கண்ணை திறந்தான், அருகில் இருக்கும் கத்தாமாவை பார்த்தான், எப்படிதான் அவன் உடலில் இவ்வளவு சக்தி இருந்ததோ தெரியவில்லை, சடார்... என்று எழுந்திருக்க உடலில் இணைக்கப்பட்ட வயர்கள், டியூப்கள் எல்லாம் தெறிக்க, அவளை கட்டிப்பிடித்து, முதுகில் குத்து குத்து என்று குத்தி, கறுத்த அவளுடை முகத்திலும், கழுத்திலும், முத்தங்கள் பொழிய அனைவர்களுடைய கண்களிலும் கண்ணீர் உருண்டு ஓடியது. எத்தனை பாசமலர் படம் பார்த்தாலும் இந்த காட்சி கிடைக்காது.

அங்கு வந்து இருந்த அனைத்து பெண்மணிகளும் அந்த வேலைக்காரியை முத்தத்தால் நனைத்தார்கள்.

சிறிது நேரத்தில் அந்த வளாகம் குதூகலமாகவும், சந்தோசமாகவும், ஒரு விருந்து மண்டபம் போல் உருமாறி விட்டது. அந்த வேலைக்கார பெண்மணி சாப்பிட்டுக்கொண்டிருந்த எச்சில் பட்ட கேக்கை, அந்த குழந்தை பிடுங்கி தின்ன, கூடி இருந்த அனைவர்களும் இரசித்து பார்க்க.. ஒரே பரவசம் தான்.

அப்புறம், அவருடைய கணவருக்கு அதே மருத்துவமனையில் மருத்துவம், அவர்களின் நிறுவனத்தில் நல்ல ஊதியத்தில் வேலை, குழந்தைகளுக்கு நம்ப முடியாத உயர்ந்த கல்வி என வாய்ப்புக்கள் கிடைத்தன.'' என்று அந்தத் தமிழக நண்பர் இந்த நிகழ்வை அப்படியே தனது முகநூலில் பதிவு செய்துள்ளார்.

நல்லதங்காள், அபிராமி போன்று தங்கள் பிள்ளைகளுக்கு கூட எமனாக மாறும் ஒரு சில தாய்கள் இருக்கின்ற இந்த அவலமான பூமியில், குழந்தைக்கு மறு உயிர் கொடுத்த இந்த வேலைக்காரி தாயை விட உயர்ந்துதானே நிற்கின்றார்..?

## மேற்தலகம் தமிழர்களைக்...

அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஆரம்ப காலப் பொறுப்பாளர்களில் ஒருவர். 2006ஆம் ஆண்டிலிருந்து பிரித்தானியாவில் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடும் தமிழ் அமைப்பு ஒன்றின் செயலாளர் நாயகமாகப் பணிபுரிபவர்.

ஆனால் டேவிட் ரொல்பேர்ற் அவர்களோ விடவில்லை. தனக்கே உரித்தான நிதானத்துடன் அவர் கூறினார்: ‘நீங்கள் கூறியதை எல்லாம் இனவழிப்பிற்கான நோக்கமாக எந்தவொரு நீதிமன்றமும் ஏற்றுக் கொள்ளாது. எனவே உங்களது மக்களுக்கு இழைக்கப்பட்ட படுகொலைகளை இனவழிப்பு என்ற கோணத்தில் அணுகுவதைத் தவிர்த்து, மானிடத்திற்கு எதிரான குற்றச்செயல் என்ற கோணத்தில் நீங்கள் அணுக வேண்டும். அது தான் உங்களுக்குப் பயனுள்ள சட்ட நகர்வாக இருக்கும்.’

அங்கிருந்த புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகளில் பெரும்பாலானவர்கள் டேவிட் ரொல்பேற் அவர்களுடன் வாதாடிக் களைத்துப் போயிருந்தார்கள். ஆரம்பத்தில் ஆக்ரோசமாகப் பேசியவர்கள் எல்லாம் சோர்ந்து போய் பேசா மடந்தைகளாக அமர்ந்திருந்தார்கள்.

அதுவரை எனது கருத்தையும் கூறுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கிட்டவில்லை. நான் பேச முற்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நான் பேசுவதற்கு இடமளிக்காமல் அங்கிருந்த இரண்டு தமிழ்ப் பெண் செயற்பாட்டாளர்களும் டேவிட் ரொல்பேர்ற் அவர்களுடன் ஆக்ரோசமாக வாதிட்ட வண்ணம் இருந்தார்கள். கடைசியில் எல்லோரும் களைத்துப் போயிருந்ததால் இதுதான் சந்தர்ப்பம் என்று நான் பேசத் தொடங்கினேன்:

‘நீங்கள் ஒரு சட்ட நிபுணர். ஆனால் நான் பன்னாட்டு உறவியலில் கலாநிதி பட்டம் பெற்ற ஒரு அரசறிவியலாளர். எனது அறிவுக்கு எட்டிய வரை இனவழிப்பு என்ற சொற்பதத்திற்கு இரண்டு வரைவிலக்கணங்கள் உள்ளன. ஒன்று சட்ட வரைவிலக்கணம். மற்றையது அரசியல் வரைவிலக்கணம். நீங்கள் கூறுவது போல் சட்ட வரைவிலக்கணத்தில் இனவழிப்பிற்கான நோக்கம் நிரூபிக்கப்படுவது முக்கியமானது தான். இதை 1948ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச் சபை அங்கீகரித்த இனவழிப்பு சாசனமும், 2002ஆம் ஆண்டில் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் உருவாக்கத்திற்கு வழிசமைத்த ரோம் சட்டமும் வரையறுத்துள்ளன.

ஆனால் இனவழிப்பிற்கான அரசியல் வரைவிலக்கணம் அவ்வாறானது அல்ல. அது 1948ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச் சபை நிறைவேற்றிய இனவழிப்பு சாசனத்திற்கு முற்பட்டது. இனவழிப்பிற்கான அரசியல் வரைவிலக்கணத்தை ரபாயேல் லெம்கின் என்ற யூத அறிஞரே அறிமுகம் செய்தார். இனவழிப்பு என்று தமிழில் பொருள்படும் ஜெனோசைட் என்று ஆங்கிலச் சொல்லை உருவாக்கியவரும் அவரே. அவரது வரைவிலக்கணக்கம் பரந்து பட்டது. அதாவது இனவழிப்புக்கான அரசியல் வரைவிலக்கணம் என்பது வெறுமனவே ஆட்கொலைகளை மட்டுமன்றி, ஒரு இனத்தைத் தமது நாட்டை விட்டுக் குடிபெயர நிர்ப்பந்தித்தல், அவர்களின் மொழி மற்றும் கலாச்சாரத்தை அழித்தல் உள்ளடங்கலான பல விடயங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. எனவே அரசியல் ரீதியில் இனவழிப்பு என்ற சொற்பதத்தை நாங்கள் பயன்படுத்துவது சரியானது.

சட்டரீதியில் வேண்டுமென்றால் அதனை நிரூபிப்பது கடினமாக இருக்கலாம். ஆனால் அரசியல் ரீதியில் அதனை நாம் இலகுவாக நிரூபிக்க முடியும். அதற்கெல்லாம் நாங்கள் நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டியதில்லை.’

இவ்வாறு நான் கூறி முடித்ததும், டேவிட் ரொல்பேர்ற்றின் முகத்தை உற்றுப் பார்த்தேன். அவரது முகத்தில் அசடு வழிந்து கொண்டிருந்தது.

ஒருவாறு தோல்வியை ஒப்புக் கொண்டவராக டேவிட் ரொல்பேர்ற் அவர்கள் பேசத் தொடங்கினார்: ‘அரசியல் ரீதியில் இனவழிப்பு என்ற சொற்பதத்தை நீங்கள் பயன்படுத்துவதற்கு எந்தத் தடைகளும் இல்லை. சட்ட ரீதியில் அச் சொற்பதத்தைப் பயன்படுத்துவதில் சிக்கல் இருக்கின்றது என்பதையே நான் உங்களுக்கு விளக்க முற்பட்டேன். எனவே இனவழிப்புக்கான அரசியல் வரைவிலக்கணம் பற்றிய உங்கள் வாதத்தை நான் ஏற்கிறேன்.’

அந்தக் கணமே அங்கிருந்த புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் பதினேழு பிரதிநிதிகளின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடத் தொடங்கியது.

ஆனால் அங்கிருந்த இரண்டு மதில்மேல் பூனைகள் மட்டும் திடீரென ஏற்பட்ட திருப்பத்தை சீரணிக்க முடியாது அதிர்ச்சியில் ஆழ்ந்திருந்தார்கள்.

(தொடரும்)

# கண்ணீர் கோலம் வீரரே! எங்கள் காலம் இப்போ மௌனம் தான் வீரரே!

***எங்கள் அன்புக்குரிய தமிழீழ மக்களே !***

இதயக்கோயில் என்றும் குடியிருக்கும் மாவீரச் செல்வங்களின் நாளான கார்த்திகை 27 ஆம் நாளில் தமிழீழ தேசத்திலும் புலம்பெயர்ந்து தமிழ் மக்கள் வாழும் நாடுகளிலும் மாவீரர்நாள் மிகவும் எழுச்சியுடன் நினைவு கூரப்பட்டது. பௌத்த பேரினவாதத்தின் அதியுச்ச தலைவர்களாக சனாதிபதியும், பிரதமராகவும், இனப்படுகொலைகள் காரணமாகவிருந்த இராணுவ அதிகாரிகள் தலைமைப்பொறுப்பிலும் ஆட்சிபீடமேறியிருக்கும் இன்றைய தாயகச் சூழ்நிலையில், எதற்கும் துணிந்து எதிர்கொண்டும் தங்கள் பிள்ளைகளின், சகோதர்களின், உறவுகளின் சகதோழர்களின், நண்பர்களின் உயிர் கொடைக்கான வரலாற்றுக் கடமையை எம் தேசமக்கள் கொட்டும் மழையிலும் வெளிக்காட்டியிருந்தனர்.

பிரான்சிலும் பல்வேறு நகரங்களில் வாழும் தமிழ் மக்கள் தமது மாவீரர்நாளில் மாவீரச்செல்வங்களுக்கு தமது கடமையை செய்திருந்தனர். பாரிசிலும் நடைபெற்ற தேசிய மாவீரர்நாள் நிகழ்விலும் கொட்டும் பனிக்கட்டி மழைக்கு மத்தியிலும் எமது மக்கள் தமது பிள்ளைகள், குழந்தைகளுடன் வந்து மாவீரர்களுக்கான வணக்கத்தைச் செலுத்தியிருந்தனர். இந்த உயர் வணக்க நிகழ்வுக்கான ஏற்பாடுகளில் எமது அனைத்து உப கட்டமைப்புகளும் பல மாதங்களுக்கு முன்பிருந்தே தமது பணிகளை அர்ப்பணிப்புடன் ஆற்றியிருந்தன. இந்த உரிமை மிகு வணக்க நிகழ்வுக்கு பாரிசு வர்த்தக நிலையங்களும் தமது பங்களிப்பைப் பல வழிகளில் வழங்கியிருந்தனர். எமது மக்களின் தேசப்பற்றையும், இனவிடுதலையும் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் என்ற உயரிய கோட்பாட்டைக் கொண்ட பிரெஞ்சு தேச மக்களுக்கும், ஏனைய பல்லின மக்களுக்கும் தெரியப்படுத்தும் வகையில் மஞ்சள், சிவப்பு எழுச்சி நிறங்கள் கொண்ட கொடிகளை வர்த்தக நிலையங்களில் வர்த்தகர்களின் அனுமதியுடனும் விருப்பத்துடன் கடந்த காலத்தில் கட்டப்பட்டு வந்திருந்தது. இச் செயற்பாடானது ஆண்டுக்கு இரண்டு தடவைகள் தமிழினப்படுகொலைக்குள்ளான நாளான மே 18 ஆம் நாளிலும், மாவீரர்நாள் நவம்பர் 27 இலிலும் மக்களால் செய்யப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு உணர்வுகள் மேலிட்ட மே 18 இன் 10 ஆம் ஆண்டினைச் செய்வதற்கு சிலரால் தடைகள் ஏற்பட்டிருந்தன. அவைகள் உரியவர்களோடும் எமது வர்த்தகர்களுக்கும் தெரியப்படுத்தி அவர்களும் தமது கடமையைச் செய்திருந்தனர்.

மாவீரர் நினைவாக ஏனைய தமிழர்கள் வாழும் நாடுகளில் வர்த்தக நிலையங்கள், வர்த்தக சங்கங்கள் அனுசரணையுடன் எழுச்சிக்கோலம் கொண்ட போதும் பாரிசிலும் உணர்வும் தேசப்பற்றும் கொண்ட வர்த்தகர்கள் தாமும் தமது உணர்வுகளை வெளிக்காட்ட மஞ்சள், சிகப்புக்கொடிகளை தமது நிறுவனங்களில் கட்ட முற்பட்டபோது சிலரால் முட்டுக்கட்டை போடப்பட்டுள்ளது. அதனை பேசி, புரிந்துணவுடன் ஒரு நிலைப்பாட்டிற்கு செல்வதற்கு முன் ஒரு சிலர் இதனைச் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி, சட்டத்தை கையில் எடுத்து, முறையற்ற வார்த்தைப் பிரயோகங்களையும் வர்த்தகர்கள் மீது பாவித்து மேற்கொண்டிருந்த செயற்பாடானது விரும்பத்தகாத பெயரினை எமக்குத் தோற்றுவித்திருக்கின்றது. இவர்களின் இவ்வாறான செயற்பாட்டிற்கும் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினராகிய எமக்கும் எமது ஏனைய கட்டமைப்புகளுக்கும் எந்த விதமான தொடர்போ தூண்டுதலோ கிடையாது என்பதை தெரிவித்துக் கொள்வதோடு, அதற்கான அவசியமும் எமக்கு தேவையற்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எழுச்சியான நேரங்களில் எழுச்சியாகவும், துயரம் தந்த நாட்களில் துயரத்தை பகிர்ந்து கொள்ளும் நோக்கிலேயும், மற்றவர்களுக்கு தெரியப்படுத்தும் நோக்கில் உணர்வுள்ள தேசவிடுதலைப் பற்றுக்கொண்ட வர்த்தகர்களின் விருப்பத்திற்கு அமையவே இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த தடவை மே 18 இலும் அவற்றைச் செய்வதற்கு சிலதடைகள் சிலரால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதாகவும் அதன் தொடர்ச்சியாகவும் தான் மாவீரர் எழுச்சிக் கோலம் தடைப்பட்டது அனைவராலும் பார்க்கப்படுகின்றது.

ஆனாலும் நடைபெற்று முடிந்த மாவீரர்நாளில் வழமையை விட பல்லாயிரம் மக்கள் கலந்து கொண்டு உயிரது ஈன்றோர் உணர்வில் கலந்தே எமது மக்கள் உள்ளொளியைப் பெருக்கினர். ஈழ உரிமைப் போரின் சக்தியில் யாவரும் ஒன்றாய் கலந்திட்டனர். இதற்கு சோடனையோ, அலங்காரமோ தேவையில்லை அவை அகவுணர்வு கொண்டு ஒவ்வொரு இனமானத்தமிழ்களினால் உள்ளாந்து செய்யப்பட வேண்டும். அதற்கான மாற்றம் ஈழத் தமிழர்களின் வர்த்தக இதயமான லாச்சப்பல் பகுதியில் ஏற்படும்.

***அதுவரை,***

***எங்கள் கண்கள் கண்ணீர் கோலம் வீரரே! எங்கள் காலம் இப்போ மௌனம் தான் வீரரே! என்ற வரிகளுக்கமைய எம் மாவீரர்களிலும், மக்கள் மீதும் நம்பிக்கை கொண்டு அவர்கள் கால்தடம் பற்றி தொடர்ந்தும் பயணிப்போம்.***

***நன்றி***

***“தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம்”***

***தமிழர் ஒருங்கிணைப்புக்குழு - பிரான்சு***











